07.11.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### கன மழை எச்சரிக்கை: தப்புமா தீபாவளி

சென்னை,: 'வங்க கடலில் உருவாகியுள்ள காற்று அழுத்த தாழ்வு நிலை அடுத்த இரு நாட்களில் மிகத் தீவிரமடையும் என எதிர்பார்ப்பதால் நவ., 8 முதல், 11 வரை, தமிழகத்தில் கன மழை பெய்யும்' என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நவ., 10 தீபாவளி பண்டிகையின் போது கன மழை பெய்யலாம் என, கணிக்கப்பட்டு உள்ளது.டில்லியை தலைமையிடமாக கொண்டுள்ள, 'ஸ்கைமெட்' என்ற தனியார் வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கை:வங்க கடலின் தென்மேற்கு பகுதியில் உருவாகியுள்ள காற்று அழுத்த தாழ்வு நிலை வலுவடைந்து, குறைந்த காற்று அழுத்த தாழ்வு பகுதியாக உருமாறி தமிழக கடலோரத்தை நோக்கி, நவ., 8 முதல் நகரலாம் என, தெரிகிறது. இதனால் 8 முதல் 11 வரை நான்கு நாட்களுக்கு சென்னை, காஞ்சிபுரம், நாகபட்டினம் பகுதிகளில் கன மழையும், பிற மாவட்டங்களில் பரவலான மழையும் பெய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தீபாவளி நாளில், கனமழைக்கு அதிக பட்ச வாய்ப்புள்ளது.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.புயல்: அரபி கடலின் தென்மேற்கு பகுதியில் உருவாகி உள்ள புயலுக்கு 'மெக்' என பெயரிடப்பட்டு உள்ளது. இந்த பெயரை, இந்தியா தேர்வு செய்துள்ளது. 'மெக்' என்பது சமஸ்கிருத வார்த்தை; மழை மேகம் என்பது இதன் பொருள். கடந்த வாரம் அரபி கடலில் உருவான, 'சாப்லா' புயலை போலவே, 'மெக்' புயலும், வளைகுடா நாடுகளை தாக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.இந்த புயலால் நவ., 10 வரை, அப்பகுதிகளில் கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என, டில்லியில் உள்ள வானிலை சிறப்பு மையம் அறிவித்துள்ளது

### மழைக்கு தாங்காத 'கோ 51' ரக நெற்பயிர்கள்: நஷ்டத்தில் தவிக்கும் விவசாயிகள்



மதுரை:தமிழ்நாடு வேளாண் பல்கலை சிபாரிசு செய்த 'கோ - 51' ரக நெற்பயிர்கள் மழைக்கு தாங்காமல் வயலில் சாய்ந்தன. மதுரையில் கதிர் முற்றிய பயிர்கள் மீண்டும் முளைத்துள்ளன. இதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் 110 நாட்களில் விளையும் ஜெ.ஜி.எல்., என்.எல்.ஆர்., மற்றும் கர்நாடக பொன்னி (பபட்லா 5204) போன்ற வெளி மாநில நெல் ரகங்களை கோடை, குறுவை, சம்பா பருவங்களில் பயிரிடுவது வழக்கம். மழை, காற்று, புயல் என இடர்பாடுகளை தாங்கி வளரும் நெல் ரகங்கள் இவை. இவற்றை மட்டும் பயிரிட வேளாண் துறை பரிந்துரை செய்யும்.கதிரில் முளைத்த நெல்வேளாண் பல்கலை 'கோ-51' என்ற 110 நாட்களில் விளையும் ரகத்தை இந்த ஆண்டு அறிமுகப்படுத்தியது. தமிழகத்தில் ஏராளமான விவசாயிகள் இந்த ரகத்தை பயிரிட்டனர். மதுரை கருப்பாயூரணி பகுதியில் கதிர் முற்றிய நிலையில், சமீபத்தில் பெய்த மழையால் 'கோ-51' நெற்கதிர்கள் வயலில் சாய்ந்தன. கதிர்களில் இருந்து மீண்டும் நெல் முளைத்து வருகிறது.விவசாயிகள் கண்ணீர்மதுரை ஏ.எஸ்.பண்ணை நிர்வாகி எஸ். தர்மராஜ் கூறியதாவது:20 ஏக்கரில் 'கோ-51' நெல் பயிரிட்டு, 90வது நாளில் கதிர் முற்றியது. சில நாட்களுக்கு முன் பெய்த மழையில், கதிர்கள் முழுவதும் வயலில் சாய்ந்தன. இயந்திரம் மூலம் கூட அறுவடை செய்ய இயலவில்லை. இரு நாட்களில் கதிர்களில் இருந்து மீண்டும் நெல் விளைந்து விட்டது. மாட்டுத்தீவனத்துக்கு கூட பயனின்றி போனது. ரூ.16 லட்சம் நஷ்டம். தமிழகம் முழுவதும் இதே நிலைதான். கோடைக்குதான் இந்த ரகம் ஏற்றது, என்றார்.மதுரையில் வேளாண் இணை இயக்குனர் சாரநாத்பாபு, 'கோ-51' நெல் வயல்களை ஆய்வு செய்தார். உதவி இயக்குனர் தனுஷ்கோடி, வேளாண்

பல்கலை உதவி பேராசிரியர்கள் ஆனந்த், வீரபத்திரன், மனோன்மணி, உஷாராணி உடனிருந்தனர்.இணை இயக்குனர் கூறுகையில், "கோ-51' ரக நெல் பயிரிட்டு பாதிக்கப்பட்டவர்கள் பட்டியல் தயாரிக்கப்படுகிறது. சிட்டம்பட்டியில் 'கோ-51' ரக நெல் நன்றாக விளைந்துள்ளது," என்றார். வேளாண் பல்கலை உதவி பேராசிரியர் ஆனந்த் கூறுகையில், "கோவை உட்பட பல இடங்களில் 'கோ-51' ரக நெல் நன்றாக விளைந்துள்ளது. வயலில் தண்ணீர் தேங்காமல் வெளியேற்றி இருந்தால் கதிர்கள் சாய்ந்திருக்காது. தண்ணீரில் கதிர்கள் மூழ்கி இருந்ததால் மீண்டும் முளைப்புத்திறன் வந்துள்ளது," என்றார்.

**அழகப்பா பல்கலை., பொருளியல் துறை வேளாண் நூல் இங்கிலாந்தில் வெளியீடு**

காரைக்குடி:அழகப்பா பல்கலை., பொருளியல் மற்றும் ஊரக வளர்ச்சி துறை சார்பில், எழுதப்பட்ட, வேளாண்மை குறித்த நூல், இங்கிலாந்தின் தலை சிறந்த பதிப்பகமான ரவுட்லெட்ஜி பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது, என துணைவேந்தர் சுப்பையா கூறினார்.காரைக்குடியில் அவர் கூறியதாவது: பொருளியல் மற்றும் ஊரக வளர்ச்சி துறையானது 2011-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. துறை தலைவர் நாராயணமூர்த்தி, நபார்டு இருக்கை பேராசிரியர் விருது பெற்றுள்ளார். இந்தியாவில் வழங்கப்படும் ஐந்து விருதில் இது ஒன்று. இதன் மூலம் ரூ.1.25 கோடி அளவிற்கான நிதி நபார்டு வங்கி மூலம் இந்த இருக்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. மும்பையை தலைமையிடமாக கொண்ட இந்திய வேளாண் பொருளியல் கழகத்தால் கொடுக்கப்படும், மிக சிறந்த இந்திய வேளாண்மை பொருளியல் ஆராய்ச்சியாளர் விருதும் துறை தலைவருக்கு வழங்கப் பட்டுள்ளது. இத்துறை இதுவரை ரூ.2 கோடிக்கு இந்திய மற்றும் சர்வதேச அமைப்பு மூலமாக நிதி திரட்டி ஆராய்ச்சி மேற்கொண்டு வருகிறது. உலக நீர்பாசன ஆராய்ச்சி நிறுவனம், தரிசு நில பயிர் சாகுபடி ஆராய்ச்சி நிறுவனம் மூலம், இந்த துறையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி, மத்திய அரசின் கொள்கை முடிவுகளுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.கடந்த மூன்று ஆண்டில் 4 புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதில் நீர்பாசனம்

மற்றும் ஆற்றல் சேமிப்பு குறித்த புத்தகம், இங்கிலாந்தின் தலைசிறந்த பதிப்பகங்களுள் ஒன்றான ரவுட்லெட்ஜி பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ஆந்திர மாநிலத்தில் மேற்கொள்ள வேண்டிய நீர்பாசன முறைகளின் மேம்பாடு குறித்த ஆராய்ச்சி குழுவில், அழகப்பா பல்கலை சார்பில் இத்துறை பேராசிரியர் இடம் பெற்றுள்ளார், என்றார். உடன் பதிவாளர் மாணிக்கவாசகம், முன்னாள் துணைவேந்தர் மணிமேகலை, பேராசிரியர் நாராயணமூர்த்தி உட்பட பலர் இருந்தனர்.

**தென்னை மரங்களுக்கு உரிமட்டை நீர் பராமரிப்பு : அறிவியல் மையம் யோசனை**

ராமநாதபுரம்: வறட்சியான பகுதிகளில் தென்னைகளுக்கு உரிமட்டைகள் மூலம் நீர் பராமரிக்க ராமநாதபுரம் வேளாண் அறிவியல் நிலையம் யோசனை வழங்கியுள்ளது.

தென்னைகளுக்கு பருவநிலை, மண்ணின் தன்மை, மரத்தின் வயது பொறுத்து நீர் பாய்ச்ச வேண்டும். ஓராண்டு வரை தென்னைகளுக்கு ஒரு நாள் இடைவெளியில் 10 லிட்டர் நீர், 2 முதல் 3 வயது மரங்களுக்கு வாரம் இருமுறை 40 லிட்டர் நீர், பின் வாரம் ஒருமுறை 600 லிட்டர் நீர் தேவைப்படுகிறது. இதனால் தென்னைகளுக்கு நீர்மேலாண்மை முக்கியத்துவம் பெறுகிறது. தற்போது வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ளது. இதனால் வறட்சியான பகுதிகளில் தென்னை தோப்புகளில் உரிமட்டைகள் மூலம் நீரை பராமரிக்க ராமநாதபுரம் வேளாண் அறிவியல் நிலையம் யோசனை தெரிவித்துள்ளது.அதன் திட்ட ஒருங்கிணைப்பாளர் சீகன்பால், உதவி பேராசிரியர் அருள்மொழி கூறியதாவது: இரண்டு தென்னை மர வரிசைகளுக்கு மத்தியில் 2 மீ., அகலம், 50 செ.மீ., ஆழத்தில் குழி தோண்ட வேண்டும். அதில் தென்னை உரிமட்டைகளின் நார்ப்பகுதி மேல் நோக்கி இருக்குமாறு அடுக்க வேண்டும். அதன் மீது 5 செ.மீ., உயரத்திற்கு மண் இட வேண்டும். அதேபோன்று 3 அடுக்குகளை ஏற்படுத்த வேண்டும்.இதன்மூலம் மழைநீர் வழிந்தோடாமல் உரிமட்டைகளால் உறிஞ்சப்படும். மட்டைகள் தன் எடையை போன்று 8 மடங்கு நீரை உறிஞ்சும். இந்நீர் குழியின் அடிப்பகுதி வழியாக தென்னைகளின் வேர்களுக்கு 5 மாதங்களுக்கு ஈரபதத்தை கொடுக்கும். மேலும்

உரங்கள் நன்கு கரையவும் உதவும். ஒரு குழிக்கு 250 மட்டைகள் தேவைப்படும். பல மாதங்களுக்கு பின் மட்டைகள் மக்கி உரமாக மாறிவிடும். 100 மக்கிய மட்டைகள் ஒரு கிலோ பொட்டாஷ் உரத்திற்கு சமம், என்றனர்.

**தென்னை மரங்களுக்கு உரிமட்டை நீர் பராமரிப்பு : அறிவியல் மையம் யோசனை**

ராமநாதபுரம்: வறட்சியான பகுதிகளில் தென்னைகளுக்கு உரிமட்டைகள் மூலம் நீர் பராமரிக்க ராமநாதபுரம் வேளாண் அறிவியல் நிலையம் யோசனை வழங்கியுள்ளது.

தென்னைகளுக்கு பருவநிலை, மண்ணின் தன்மை, மரத்தின் வயது பொறுத்து நீர் பாய்ச்ச வேண்டும். ஓராண்டு வரை தென்னைகளுக்கு ஒரு நாள் இடைவெளியில் 10 லிட்டர் நீர், 2 முதல் 3 வயது மரங்களுக்கு வாரம் இருமுறை 40 லிட்டர் நீர், பின் வாரம் ஒருமுறை 600 லிட்டர் நீர் தேவைப்படுகிறது. இதனால் தென்னைகளுக்கு நீர்மேலாண்மை முக்கியத்துவம் பெறுகிறது. தற்போது வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ளது. இதனால் வறட்சியான பகுதிகளில் தென்னை தோப்புகளில் உரிமட்டைகள் மூலம் நீரை பராமரிக்க ராமநாதபுரம் வேளாண் அறிவியல் நிலையம் யோசனை தெரிவித்துள்ளது.அதன் திட்ட ஒருங்கிணைப்பாளர் சீகன்பால், உதவி பேராசிரியர் அருள்மொழி கூறியதாவது: இரண்டு தென்னை மர வரிசைகளுக்கு மத்தியில் 2 மீ., அகலம், 50 செ.மீ., ஆழத்தில் குழி தோண்ட வேண்டும். அதில் தென்னை உரிமட்டைகளின் நார்ப்பகுதி மேல் நோக்கி இருக்குமாறு அடுக்க வேண்டும். அதன் மீது 5 செ.மீ., உயரத்திற்கு மண் இட வேண்டும். அதேபோன்று 3 அடுக்குகளை ஏற்படுத்த வேண்டும்.இதன்மூலம் மழைநீர் வழிந்தோடாமல் உரிமட்டைகளால் உறிஞ்சப்படும். மட்டைகள் தன் எடையை போன்று 8 மடங்கு நீரை உறிஞ்சும். இந்நீர் குழியின் அடிப்பகுதி வழியாக தென்னைகளின் வேர்களுக்கு 5 மாதங்களுக்கு ஈரபதத்தை கொடுக்கும். மேலும் உரங்கள் நன்கு கரையவும் உதவும். ஒரு குழிக்கு 250 மட்டைகள் தேவைப்படும். பல மாதங்களுக்கு பின் மட்டைகள் மக்கி உரமாக மாறிவிடும். 100 மக்கிய மட்டைகள் ஒரு கிலோ பொட்டாஷ் உரத்திற்கு சமம், என்றனர்.

**சீமை கருவேல மரத்துக்கு தடை விதிக்க அரசு பரிசீலனை: முற்றிலும் அழிக்க பல வழிகளில் ஆய்வு**



அபாயமானதாக கருதப்படும் சீமை கருவேல மரங்களை தடை செய்வது குறித்து, தமிழக அரசு பரிசீலித்து வருகிறது. தமிழகம் முழுவதும் இந்த மரங்களை அழித்து, மீண்டும் வளர விடாமல் எப்படி தடுப்பது என்பது குறித்து, பலவழிகளில் அரசு ஆராய்ந்து வருகிறது; நிபுணர்களின் உதவியும் கோரப்பட்டுள்ளது.

'சீமை கருவேலம் எனப்படும் வேலி காத்தான் மரங்கள், தமிழகம் முழுவதும் புற்றீசல் போல் வளர்ந்துள்ளன. இதன் அருகில் உள்ள தாவரங்கள் பாதிக்கப்பட்டு, நிலத்தடி நீர்மட்டம் குறைகிறது. இந்த மரங்களால் எந்த பயனும் கிடையாது. 'இதன் இலைகளை, ஆடு, மாடு போன்ற கால்நடைகள் கூட சாப்பிடுவதில்லை. விறகுக்காக மட்டும் பயன்படும் இந்த மரங்களால், சுற்றுச்சூழல் கெடுகிறது. நிலத்தடி நீர்மட்டம் குறைகிறது. எனவே, அவற்றை தடை செய்ய வேண்டும்' என, இயற்கை ஆர்வலர்கள் பல காலமாக போராடி வருகின்றனர். அதற்கான காலம் இப்போது தான் கணிந்து வருகிறது.

**பணி முடுக்கம்:**

'சீமை கருவேல மரங்களை அழிக்கவேண்டும்' என்ற வழக்கை விசாரித்து வரும் சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளை, அவற்றை அழிப்பதற்காக விரிவான திட்ட அறிக்கையை, எட்டு வாரத்துக்குள் தயாரித்து தரக்

கூறிஉள்ளது. இது தொடர்பாக, வனம், வேளாண்மை, வருவாய், பொதுப்பணி மற்றும் ஊரக வளர்ச்சி துறைகளை, தமிழக அரசு முடுக்கி விட்டுள்ளது. இந்நிலையில், சீமை கருவேல மரங்களை அகற்றுவதில், புதிய சிக்கல் எழுந்துள்ளது.

**இதுகுறித்து அரசு வட்டாரங்கள் தெரிவித்ததாவது:**சீமை கருவேல மரங்களை அகற்றும் பணிகளை முழு அளவில் செயல்படுத்த பெரும்தொகை தேவை. எனவே, அதற்காக தனி கருத்துரு தயாரிக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. சமீபத்தில், தலைமைச் செயலர் ஞானதேசிகன் தலைமையில் நடந்த பல துறை அதிகாரிகள் பங்கேற்ற, மாநில அளவிலான ஆய்வுக் கூட்டத்தில், இதுபற்றி விரிவாக ஆலோசிக்கப்பட்டது. கேரளாவை போல், தமிழகத்திலும், சீமை கருவேல மரத்துக்கு தடை விதிக்கலாமா என்றும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அதற்காக கேரளாவில் பிறப்பிக்கப்பட்டுள்ள அரசு உத்தரவை பார்த்து, அதில், என்னென்ன வழிமுறைகள் கையாளப்பட்டுள்ளன என ஆராய வேண்டியுள்ளது.

### சிக்கல்:

ஆய்வுக்கூட்டத்தில் பங்கேற்ற சில மாவட்ட அதிகாரிகள், 'கருவேல மரங்களை, புகை மூட்டம் போட்டு, கரியாக மாற்றி விற்கும் தொழிலில், ராமநாதபுரம் உள்ளிட்ட பல மாவட்டங்களில் ஏராளமானோர் ஈடுபட்டுள்ளனர். அங்கு, சீமை கருவேல மரங்களை அகற்ற எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது' என்றனர்.அதனால், சீமை கருவேல மரத்தை முழுவதுமாக தடை செய்வதில் சிக்கல் உள்ளது. எனினும், மாற்று ஏற்பாடுகள் செய்ய முடியுமா என ஆராய்ந்து வருகிறோம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

### சென்னையில் பலத்தமழை

சென்னை: தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்ததையடுத்து சென்னையில் பலத்த மழை பெய்து வருகிறது.சென்னையில் கிண்டி சூளைமேடு, சைதாப்பேட்டை, தாம்பரம், பல்லாவரம், மீனம்பாக்கம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பலத்தமழை பெய்து வருகிறது.

### நெல்லை மாவட்ட பள்ளிகளுக்கு இன்று விடுமுறை

திருநெல்வேலி: தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்ததையடுத்து நெல்லை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து மழை பெய்து வருகிறது. இதனையடுத்து மாவட்ட கலெக்டர் கருணாகரன் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் இன்று (07-11-2015) விடுமுறை அளித்து உத்தரவு பிறப்பித்துள்ளார்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 3 அடி உயர்வு**

மேட்டூர்: மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 3 அடி உயர்ந்து, 74.40 அடியாக உள்ளது. மேட்டூர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து கனமழை பெய்து வருவதால், அணைக்கு வரும் நீரின் அளவும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

**மஞ்சளாறு அணையில் நாளை நீர் திறப்பு**

சென்னை : தேனி மாவட்டம் மஞ்சளாறு அணையில் இருந்து நாளை (நவ.,8) முதல் நீர் திறக்க தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இதனால் தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள 5,259 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற உள்ளன. பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பகுதிகளில் முதல்போக பாசன வசதிக்காக மஞ்சளாறு அணை திறக்கப்படெ உள்ளது.

**இடைப்பாடியில் மழை: வீடுகளில் நீர் புகுந்தது**

இடைப்பாடி: இடைப்பாடி மற்றும் சுற்றுப்பகுதிகளில் பெய்த கன மழையால், மழைநீர் வீடுகளுக்கும், பஸ் ஸ்டாண்டில் உள்ள கடைகளுக்குள்ளும் புகுந்தது. இதனால், மக்கள், வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

இடைப்பாடியில், நேற்று முன்தினம் இரவு கனமழை பெய்தது. மழையால், பஸ் ஸ்டாண்டில் உள்ள சாக்கடையில் அடைப்பு ஏற்பட்டது. இதனால், கடைகளுக்குள் தண்ணீர் புகுந்ததால் வியாபாரிகள் பெரும் அவதிக்குள்ளாகினர். அதேபோல், மழையால் இடைப்பாடி நகராட்சியின் பல பகுதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. குறிப்பாக, மேட்டுத்தெரு, 13, 14வது வார்டு பகுதியில் சாக்கடை அடைத்துக் கொண்டு, மழைநீர் வீடுகளில்

புகுந்தது. இதனால், அப்பகுதிகளில், 20க்கும் மேற்பட்ட வீடுகளில் மழைநீர் உளளே புகுந்தது. இது குறித்து, அப்பகுதியை சேர்ந்த மாதையன் என்பவர் கூறுகையில், "நகராட்சி நிர்வாகத்தின் சார்பில், கடந்த, 3 மாதங்களுக்கு முன்னர் இப்பகுதியில் தார்ரோடு போடப்பட்டது. ரோடு உயரமாக போடப்பட்டதால் குடியிருப்பு பகுதிகளில் இருந்து வெளியேறும் மழைநீர், வெளியேற முடியாமல் வீடுகளில் புகுந்துள்ளது," என்றார்.

**ப.வேலூரில் விவசாயிகள் சங்க வாழ்வுரிமை மாநாடு**

ப.வேலூர்: ப.வேலூர் வர்த்தகர் சங்க திருமண மண்டபத்தில் நடந்த, விவசாயிகள் வாழ்வுரிமை மாநாட்டில், ப.வேலூர் பகுதியில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டும் என, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பரமத்தி வேலூர் வட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், வட்டார அளவிலான விவசாயிகள் வாழ்வுரிமை மாநாடு நடந்தது. வட்ட செயலாளர் சண்முகம் தலைமை வகித்தார். விவசாய சங்கத் தலைவர் குழந்தைவேல் வரவேற்றார். திண்டுக்கல் எம்.எல்.ஏ.,பாலபாரதி மாநாட்டை துவக்கி வைத்து பேசினார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் தங்கமணி தீர்மானங்கள் குறித்து பேசினார்.

கரும்பு கொள்முதல் செய்ய வேண்டும்: ப.வேலூரில் மிகவும் அவசியமான, தீயணைப்பு நிலையத்தை உடனடியாக அமைக்க வேண்டும். போக்குவரத்து பணிமனை அமைத்திட வேண்டும். கபிலர்மலை வட்டாரத்தில் தேங்கியுள்ள கரும்புகளை சேலம் மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகம் கொள்முதல் செய்ய வேண்டும். மரவள்ளி கிழங்கிற்கு உரிய விலை கிடைத்திட மாவட்ட நிர்வாகம் முத்தரப்பு கூட்டத்தை உடனடியாக கூட்டி விலை நிர்ணயம் செய்திட வேண்டும். கபிலர்மலை வட்டார வேளாண்மை அலுவலகத்தில் நடைபெறும் முறைகேடு மற்றும் லஞ்ச ஊழலை தடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாவட்ட செயலாளர்

ரங்கசாமி, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலப் பொதுச் செயலாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். கிருஷ்ணன் நன்றி கூறினார்.

### திருமங்கலம் கால்வாயில்தண்ணீர் திறக்கப்படுமா

மதுரை, :'19 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறும் வகையில், திருமங்கலம் பிரதான கால்வாயில் தண்ணீர் திறக்க வேண்டும்,' என கதிரவன் எம்.எல்.ஏ., வலியுறுத்தினார்.

கலெக்டர் சுப்பிரமணியனிடம், எம்.எல்.ஏ., தலைமையில் பார்வர்ட் பிளாக் செயலாளர் கணேசன் மற்றும் விவசாயிகள் அளித்த மனு: ஆண்டுதோறும் செப்டம்பரில் திருமங்கலம் கால்வாயில் நெல் நடவு செய்ய தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். பேரணையில் இருந்து திறக்கப்படும் இந்த தண்ணீர், கால்வாய் மூலம் குருவித்துறை, காடுபட்டி, சொரிகுளம், செல்லம்பட்டி, நாட்டாபட்டி, உச்சப்பட்டி, நடுமுதலைகுளம், தும்மக்குண்டு வரையிலான 19 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறும். வடகிழக்கு பருவ மழையை நம்பி விவசாயிகள் கிணற்று நீரை பயன்படுத்தி நாற்று பாவி நெல்நடவிற்கு தயாராக உள்ளனர். விவசாயிகளின் நலன் கருதி திருமங்கலம் கால்வாயில் தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், என கூறியுள்ளனர்.

வடகிழக்கு பருவமழை: பாதுகாப்பு ஏற்பாடு தயார்: கலெக்டர் தகவல்

கிருஷ்ணகிரி: வடகிழக்கு பருவமழைக்காக முன்னெச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்கப்பட்டதாக, கலெக்டர் ராஜேஷ் தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில், வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு குறித்த அனைத்து துறை அலுவலர்களுக்கான ஆய்வு கூட்டம் நடந்தது.

கூட்டத்தில், கலெக்டர் ராஜேஷ் பேசியதாவது: வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு, பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள, நான்கு அணைகள் மற்றும் மாவட்டம் முழுவதும் உள்ள ஏரிகளில், வெள்ள பெருக்கை தடுக்கும் வகையில் முன்னேற்பாட்டு நடவடிக்கை மேற்கொள்ள, சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேலும், 10 ஆயிரம் மணல் மூட்டை, கயிறு, மீட்பு பணிகளுக்கு தேவையான உபகரணங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

தென்பெண்ணை ஆற்றை, பொதுமக்கள் கடக்கும் முக்கிய இடங்களான, பாத்தகோட்டா, கோபசந்திரம் மற்றும் பிற கிராமங்கள் அருகேயுள்ள தரை பாலங்கள் முன்பு, வெள்ளப்பெருக்கு எச்சரிக்கை பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. குடிமைப்பொருட்கள் வழங்கும் துறை சார்பில் வழங்கப்படும் அத்தியாவசிய பொருட்கள், போதுமான அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. வெள்ளப்பெருக்கு காலங்களில், மாவட்டத்தில் உள்ள அரசு தலைமை மருத்துவமனை மற்றும் அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில், 24 மணி நேரமும் டாக்டர்கள் பணியில் இருக்க உத்தரவிடப்பட்டுள்ளது. கல்வித்துறை சார்பில் மழை காலங்களில் மாணவர்கள் பாதுகாப்பை மாவட்ட கல்வி அலுவலர் உறுதி செய்து கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சித்துறை சார்பில் அனைத்து பஞ்சாயத்துகளிலும் பள்ளி கட்டடங்களின் நிலை ஆய்வு செய்யப்பட்டு, அதன் பாதுகாப்பு தன்மையை உறுதி செய்து கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை வாரம் ஒரு முறை சுத்தம் செய்து, குளோரின் பவுடர் தெளிக்க வேண்டும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் வடகிழக்கு பருவ மழை முன்னேற்பாட்டு பணிகள் குறித்து, கலெக்டர் அலுவலகத்தில், 24 மணி நேரமும் சப் -கலெக்டர் தலைமையில் இயங்கும் கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த கட்டுப்பாட்டு மையத்தை, 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி மூலமாக பொதுமக்கள் தொடர்பு கொண்டு பாதிப்பு குறித்து தெரிவிக்கலாம். இவ்வாறு அவர் பேசினார்.

## நெல் வயலில் தண்ணீர்: விவசாயிகளுக்கு அறிவுரை

மொடக்குறிச்சி: பல்லாயிரக்கணக்கான விவசாய நிலங்களில் பயிரிடபட்ட நெற்பயிர்கள் மழை நீரால் மூழ்கியுள்ளதால், வயல்களில் இருந்து தண்ணீரை உடனே வெளியேற்ற விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை இணை இயக்குனர் திருமூர்த்தி அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது: கடந்த ஆகஸ்ட் மாதம் கீழ்பவானியிலிருந்து சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. ஈரோடு மாவட்டம் முழுவதும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் விவசாயிகள் நெற்பயிர் சாகுபடி செய்துள்ளனர். தற்போது நெற்பயிர்கள் பால் கருதுகளை தள்ளியுள்ளன.

மொடக்குறிச்சி, கொடுமுடி, அரச்சலூர், அவல்பூந்துறை, வெள்ளோடு பகுதிகளில் தற்போது தான் நடவு பருவத்தில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றன. நேற்று முன் தினம் பெய்த கனமழையால் கொடுமுடிப்பகுதியில், 10 ஹெக்டேர் நெற்பயிர்கள், 8 ஹெக்டேர் கரும்பு வயல்கள், மொடக்குறிச்சி வட்டாரத்தில் எழுமாத்தூர், ஈஞ்சம்பள்ளி, துய்யம்பூந்துறை, நஞ்சைஊத்துக்குளி, சாலைப்புதூர் ஆகிய பகுதியில், 8 ஹெக்டேர் பரப்பளவில் நெற்பயிர்கள் இன்னமும் தண்ணீரில் மூழ்கியுள்ளன. கோபி அருகே மேட்டுநாசுவம்பாளையம் பகுதியில், 1.2 ஹெக்டேர் பயிர்கள் மழையால் பாதித்துள்ளது. இந்த மழை தொடர்ந்தால் பல்லாயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் பாதிக்கும் அபாயம் உள்ளது. விவசாயிகள் மழைக்காலத்தில் நெல் வயல்களுக்கு மருந்து, உரம், தண்ணீர் எதையும் பாய்ச்சுவதோ, தெளிப்பதோ வேண்டாம். தற்போது பெய்த மழையால் வயல்களில் இருக்கும் தண்ணீர் நான்கு, ஐந்து நாட்களுக்கு போதுமானதாக இருக்கும். இருப்பினும் தற்போதுள்ள சூழ்நிலைக்கு வயல்களில் இருக்கும் தண்ணீர் மடைகளை திறந்தே வைத்திருக்க வேண்டும். மழை நீடிக்கும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. மழையின் வருகையை பார்த்து விவசாயிகள் முன்னெச்சரிக்கையோடு பணியில் ஈடுபடவேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## உருளைக்கிழங்கில் அழுகல் நோய் பாதிப்பு

மஞ்சூர்: உருளைக்கிழங்கு பயிரில் அழுகல் நோய் பாதிப்பு ஏற்பட தொடங்கியுள்ளதால், நீலகிரி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.இம்மாவட்டத்தில், மஞ்சூர் அருகே, எமரால்டு, காந்திகண்டி, லாரன்ஸ், இத்தலார், பெம்பட்டி, பேலிதளா, கோத்தக்கண்டிமட்டம் சுற்றுவட்டார பகுதிகளில் பல நூறு ஏக்கரில், உருளைக்கிழங்கு பயிரிடப்பட்டுள்ளது. சில நாட்களாக பெய்யும் கனமழையால், பயிர் நீரில் மூழ்கியுள்ளது.

ஒரு சில இடங்களில், அழுகல் நோய் பாதிப்பும் தென்பட தொடங்கியுள்ளது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

மஞ்சூர் விவசாயி நஞ்சன் கூறுகையில், “மழையால், மலை காய்கறி பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன. உருளைக்கிழங்கை அழுகல் நோய் தாக்கி வருகிறது. மழை அதிகரித்தால், பெரும் நஷ்டம் ஏற்படும்,” என்றார்.

### வெற்றிலை பதியம் நாசம்: விவசாயிகள் பாதிப்பு

கரூர்: கரூர் மாவட்டத்தில், பதியம் போடப்பட்டுள்ள வெற்றிலை கொடிக்காலை, கால்நடைகள் நாசம் செய்வதால், அப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். கரூர் மாவட்டம் முழுவதும், மழை பெய்து வருவதால், வெற்றிலை கொடிக்கால் பகுதியில் பதியம் போடப்பட்டு, பயிர் செய்யப்பட்டு வருகிறது. லாலாபேட்டை பகுதியில், 300க்கும் மேற்பட்ட ஏக்கரில் வெற்றிலை விவசாயம் செய்து வரும் நிலையில், கால்நடைகள் அவற்றை சேதப்படுத்துவதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இரவு நேரத்தில், லாலாபேட்டை சுற்றியுள்ள பகுதிகளில் திரியும், ஆடு, மாடு, பன்றிகள் வெற்றிலை பதியம் போடப்பட்ட பகுதியில் நாசம் செய்கிறது. இவற்றை தடுக்க சம்பந்தப்பட்ட நிர்வாகம் முன்வர வேண்டும்.

### சீமை கருவேல மரங்கள் அகற்றிட வேண்டுகோள்

குளித்தலை: கழுகூர் பஞ்சாயத்து பகுதியில், சீமை கருவேல மரங்கள் அகற்றிட வேண்டும் என, பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். குளித்தலை அடுத்த, கழுகூர் பஞ்சாயத்து பகுதியில், சீமை கருவேல மரங்கள் அதிகளவு வளர்ந்து காணப்படுகிறது. மரங்களை அகற்றிட நீதிமன்றம் உத்தரவிட்டும், பஞ்., நிர்வாகம் கண்டும் காணாமல் உள்ளது. பஞ்சாயத்து நிர்வாகத்தின் அலட்சிய போக்கு குறித்து ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்திடம் புகார் தெரிவித்தும் நடவடிக்கை இல்லை. எனவே, மாவட்ட நிர்வாகம், கழுகூர் பஞ்., பகுதியில் உள்ள சீமை கருவேல மரங்களை அகற்றிட முன்வர வேண்டும் என,பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### உழவர் பாதுகாப்பு திட்டம்: பயன் பெற அழைப்பு

கரூர்: 'உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கும், அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன' என்று, கரூர் மாவட்ட கலெக்டர் ஜெயந்தி தெரிவித்தார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை: உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பதிவு பெற்ற உறுப்பினர்கள் திருமணம் செய்து கொண்டாலோ, உறுப்பினரின் மகன், மகளுக்கு திருமணம் நடந்தாலோ, திருமண உதவித்தொகையும், பதிவுபெற்ற உறுப்பினர் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் இயற்கை மரணம் அடைந்தாலோ, விபத்து ஏற்பட்டு இறந்தாலோ அதற்கான நிவாரண உதவிகள் வழங்கப்படும். தொழிற்கல்வி, பட்டப்படிப்பு பயிலும் உறுப்பினர்களின் மகன், மகளுக்கு, கல்வி உதவித்தொகை வழங்கப்படும். புற்றுநோய், காசநோய், எய்ட்ஸ் போன்ற நோய்களில் பாதிக்கப்பட்டோருக்கு தற்காலிக இயலாமைக்கான உதவித்தொகையும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும். இதற்கான நிதி தமிழக அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பதிவு பெற்ற உறுப்பினர்கள் இந்த சலுகைகளை பெற்று பயன்பெற வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### பருவமழை தாமதத்தால் துவரை விளைச்சல் பாதிப்பு

நத்தம்: நத்தம் வட்டாரத்தில் பருவமழை தாமதாக பெய்வதால் துவரை விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.

நத்தம் சுற்று வட்டாரத்தை சேர்ந்த மூங்கில்பட்டி, பட்டணம்பட்டி, காசம்பட்டி, கோமணாம்பட்டி, சாத்தாம்பாடி, நடுமண்டலம், சமுத்திராபட்டி பகுதிகளில் விவசாயிகள் துவரை சாகுபடி செய்துள்ளனர். பயிர் செய்ததில் இருந்து 5 மாதங்களுக்குள் துவரை முழு விளச்சல் பெற்றுவிடும். கேழ்வரகு, கடலை சாகுபடி வயல்களின் குறுக்காகவும் ஓரக்கால்களிலும் துவரையை பயிர் செய்துள்ளனர். இப்பகுதிகளில் பெரும்பாலான விசாயிகள் மூன்று மாதங்களுக்கு முன்பே துவரை சாகுபடி செய்துள்ளனர்.

தற்போது காய் பிடிக்கும் தருவாயில் உள்ளது. கடந்த மூன்று மாதத்தில் இப்பகுதியில் போதிய மழை பெய்யவில்லை. இதனால் துவரை செடியின்

ஊக்கம் பாதிக்கும் நிலை ஏற்பட்டது. இந்நிலையில் கடந்த சில நாட்களாக இப்பகுதியில் பருவமழை பெய்து வருகிறது.

இதனால் செடிகள் செழிப்புடன் காணப்பட்டாலும் மழைப்பொழிவு தாமதத்தால் குறைந்த அளவிலேயே பூ மற்றும் காய்கள் பிடித்துள்ளதாக விவசாயிகள் இப்பகுதி தெரிவித்தனர்.துவரை மகசூலை அதிகரிக்க வேளாண்மை துறையினர் யோசனை வழங்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## மானாவாரி பயிர் சாகுபடியால் கால்நடை தீவனத்திற்கு தீர்வு

நிலக்கோட்டை:நிலக்கோட்டை கிராமப்பகுதிகளில் மானாவாரி பயிர்கள் சாகுபடி அதிகரித்துள்ளதால் கால்நடை தீவன பிரச்னைக்கு தீர்வு கிடைத்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.மைக்கேல்பாளையம், செங்கோட்டை, அவையம்பட்டி, பாலம்பட்டி, பொம்மனம்பட்டி பகுதிகளில் கண்மாய் பாசனத்தை நம்பியே விவசாயம் நடக்கிறது. அதிக மழை இல்லாததால் குறுகிய கால மானாவாரி பயிர்களான கம்பு, சோளத்தை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். இப்பயிர்களுக்கு அதிக அளவு தண்ணீர் தேவை இல்லை. மூன்றே மாதங்களில் அறுவடைக்கு தயாராகிவிடும். மூன்று மாதங்களுக்குள் மழை பெய்தால் சோளம், கம்பு சாகுபடி செய்யலாம். மழை பெய்யாவிட்டால் தட்டைகள் கால்நடைகளுக்கு தீவனமாகப் பயன்படும். பாலம்பட்டியைச் சேர்ந்த முருகன் கூறுகையில், ""வசதி உள்ளவர்கள் ஆழ்துளை கிணறு அமைத்துள்ளனர். பல விவசாயிகள் மானாவாரி பயிர்களை சாகுபடி செய்துள்ளதால் இந்த ஆண்டு கால்நடை தீவனத்திற்கு பிரச்னை இருக்காது, எங்கள் பகுதி கண்மாய்களுக்கு நீர் வரத்து ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும்" என்றார்.

## அணைகளில் நீர் மட்டம் உயர்வு குடிநீருக்கு பிரச்னை இல்லை

திண்டுக்கல், :திண்டுக்கல் நகருக்கு குடிநீர் வழங்கும் ஆத்தூர் நீர் தேக்கப்பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் நீர் மட்டமும் உயர்ந்து வருகிறது.திண்டுக்கல் நகரின் குடிநீர் ஆதாரமாக விளங்கும் ஆத்தூர்

நீர்தேக்கத்தில் இருந்து 90 லட்சம் லிட்டர் தண்ணீர் எடுக்க வேண்டும். தற்போது 60 லட்சம் லிட்டர் தண்ணீர்தான் எடுக்கப்படுகிறது. இதுவழியோர கிராமங்கள் போக 4 லட்சம் லிட்டர்தான் திண்டுக்கல் நகரப்பகுதிக்கு கிடைக்கிறது. ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு 90 லிட்டர் வீதம் தண்ணீர் வழங்கப்படுகிறது.

கடந்த சில நாட்களாக மழை இல்லாததால், நீர்மட்டம் குறைந்தே காணப்பட்டது. நீர்த்தேக்கப்பகுதியில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் மட்டும் 40 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. இதனால் அணையின் நேற்றைய நீர்மட்டம் 19 அடியாக உயர்ந்தது. மொத்த உயரம் 23 அடியாகும். அணைகளில் நீர்மட்டம்: திண்டுக்கல் மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், நேற்றைய நிலவரப்படி அணைகளின் நீர் மட்டம் விபரம் வருமாறு:

பாலாறு பொருந்தலாறு 36 (65அடி), பரப்பலாறு 70(90), வரதமாநதி 59(66), குதிரையாறு 44 (79), குடகனாறு 10 (27), நங்காஞ்சியாறு 25(39), மருதாநதி 58(64), காமராஜர் நீர்தேக்கம் 19(23), மஞ்சளாறு 56(57) அடியாக உள்ளது. அணைகளின் நீர் மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருவதால் மாவட்டத்தில் குடிநீர் பிரச்னை ஏற்பட வாய்ப்பில்லை.

**பூச்சிகொல்லி மருந்துகளால் காணாமல் போன நண்டுகள்**

தேனி,: நெல் பயிருக்கான பூச்சிக்கொல்லி மருந்துகளை நேரடியாக நிலத்தில் இடும் முறை பின்பற்றப்படுவதால், வயல்வெளிகளில் நண்டுகள் அழிந்து வருகின்றன.

தமிழகத்தில் 21 லட்சம் எக்டேரில் நெல் சாகுபடி நடந்து வருகிறது. வயல்களில் இலை தழைகள், குப்பைகள், ஆடு, மாடுகளின் கழிவுகள் உள்ளிட்ட இயற்கை உரங்களை பயன்படுத்துவதை கைவிட்டு, விவசாயிகள் காலப்போக்கில் யூரியா, டி.ஏ.பி., காம்ப்ளக்ஸ் போன்ற ரசாயன உரங்களை பயன்படுத்த துவங்கினர். பயிர் வளர்ந்த பிறகு கதிர், இலைகளில் ஏற்படும் பூச்சிகளின் தாக்குதலுக்கு "ஸ்பிரேயர்' மூலம் பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளிக்கப்பட்டது.

ஆனால் கடந்த 15 ஆண்டுகளாக, பூச்சிக்கொல்லி மருந்துகளை பயிர் வளர்ந்த பிறகு அடிக்கும் முறை மாறி, நேரடியாக நிலத்திலேயே இடும் முறை பின்பற்றப்படுகிறது. இதனால், விவசாயிகளும் நிலம் உழுதவுடன் ஆரம்பத்தில் யூரியா இடும் போதே பூச்சிக்கொல்லிக்கான மருந்தையும் கலந்து நேரடியாக நிலத்தில் இட்டு விடுகின்றனர். இதனால் நச்சுத்தன்மையுள்ள பூச்சிகொல்லி மருந்துகள் மண்ணில் கலக்கிறது. இந்த நச்சுத்தன்மையால் தமிழகள் முழுவதும் வயல்வெளிகளில் வாழும் 80 சதவீத நண்டுகள் அழிந்து விட்டன. கம்பம் பள்ளத்தாக்கில் நண்டுகளை பார்ப்பதே அரிதாக உள்ளது. இன்னும் சில ஆண்டுகளில் வயல், வாய்கால்களில் முழுமையாக நண்டுகளே இல்லாமல்போகும் நிலை ஏற்பட்டு விடும்.

## தென்னை மரங்களுக்கு உரிமட்டை நீர் பராமரிப்பு

ராமநாதபுரம்: வறட்சியான பகுதிகளில் தென்னைகளுக்கு உரிமட்டைகள் மூலம் நீர் பராமரிக்க ராமநாதபுரம் வேளாண் அறிவியல் நிலையம் யோசனை வழங்கியுள்ளது.

தென்னைகளுக்கு பருவநிலை, மண்ணின் தன்மை, மரத்தின் வயது பொறுத்து நீர் பாய்ச்ச வேண்டும். ஓராண்டு வரை தென்னைகளுக்கு ஒரு நாள் இடைவெளியில் 10 லிட்டர் நீர், 2 முதல் 3 வயது மரங்களுக்கு வாரம் இருமுறை 40 லிட்டர் நீர், பின் வாரம் ஒருமுறை 600 லிட்டர் நீர் தேவைப்படுகிறது. இதனால் தென்னைகளுக்கு நீர்மேலாண்மை முக்கியத்துவம் பெறுகிறது.

தற்போது வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ளது. இதனால் வறட்சியான பகுதிகளில் தென்னை தோப்புகளில் உரிமட்டைகள் மூலம் நீரை பராமரிக்க

ராமநாதபுரம் வேளாண் அறிவியல் நிலையம் யோசனை தெரிவித்துள்ளது.

அதன் திட்ட ஒருங்கிணைப்பாளர் சீகன்பால், உதவி பேராசிரியர் அருள்மொழி கூறியதாவது: இரண்டு தென்னை மர வரிசைகளுக்கு மத்தியில் 2 மீ., அகலம், 50 செ.மீ., ஆழத்தில் குழி தோண்ட வேண்டும். அதில் தென்னை உரிமட்டைகளின் நார்ப்பகுதி மேல் நோக்கி இருக்குமாறு அடுக்க வேண்டும்.

அதன் மீது 5 செ.மீ., உயரத்திற்கு மண் இட வேண்டும். அதேபோன்று 3 அடுக்குகளை ஏற்படுத்த வேண்டும்.

இதன்மூலம் மழைநீர் வழிந்தோடாமல் உரிமட்டைகளால் உறிஞ்சப்படும். மட்டைகள் தன் எடையை போன்று 8 மடங்கு நீரை உறிஞ்சும். இந்நீர் குழியின் அடிப்பகுதி வழியாக தென்னைகளின் வேர்களுக்கு 5 மாதங்களுக்கு ஈரபதத்தை கொடுக்கும். மேலும் உரங்கள் நன்கு கரையவும் உதவும். ஒரு குழிக்கு 250 மட்டைகள் தேவைப்படும். பல மாதங்களுக்கு பின் மட்டைகள் மக்கி உரமாக மாறிவிடும். 100 மக்கிய மட்டைகள் ஒரு கிலோ பொட்டாஷ் உரத்திற்கு சமம், என்றனர்.

## ஆடு, கோழி விலை உயர்வு

சிங்கம்புணரி: சிங்கம்புணரி வாரச்சந்தையில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஆடு,கோழி விலை உயர்ந்துள்ளது. வழக்கமாக சிங்கம்புணரி சுற்று கிராமங்களில் வளர்க்கப்படும் ஆடு, கோழிகள் வாரச் சந்தைக்கு விற்பனைக்கு வரும். தீபாவளியை முன்னிட்டு விராலிமலை,நத்தம்,மேலூர் பகுதிகளிலிருந்து வியாபாரிகள் ஆடு,கோழிகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். சாதாரண நாட்களில் 10 கிலோ எடையுள்ள வெள்ளாடு விலை ரூ.3 ஆயிரத்திற்கு கிடைக்கும். தற்போது ரூ 3.ஆயிரத்து 50 0 ஆக <உயர்ந்தது. ரூ.8 ஆயிரத்திற்கு கிடைக்கும் 20 கிலோ வெள்ளாடு ரூ 9 ,10 ஆயிரம் வரை விலை விற்றது. நாட்டுக்கோழி 2 கிலோ எடை ரூ 400 லிருந்து ரூ 500 ஆக உயர்ந்தது. நாட்டுச்சேவல் 2 கிலோ எடை ரூ.300 லிருந்துரூ.400 ஆக உயர்ந்தது.

## பாபநாசம் அணை பாசனத்திற்கு திறப்பு; 86 ஆயிரம் ஏக்கர் நிலம் பயன் பெறும்

திருநெல்வேலி: நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் பிசான நெல் சாகுபடிக்காக பாபநாசம் அணையில் இருந்து கலெக்டர் கருணாகரன் தண்ணீரை திறந்துவைத்தார்.

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் பிசான நெல்சாகுபடி பருவத்திற்கான நெல்நடவு பணிகள் தற்போது வங்கியுள்ளது. வடகிழக்கு பருவமழையை நம்பி மேற்கொள்ளப்படும் இந்த

தருணத்தில், பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறுஅணைகளில் இருந்து தண்ணீர் திறந்துவிட முதல்வர் ஜெ.,உத்தரவிட்டார். திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தாமிரபரணி ஆற்றின் கீழ் 11 கால்வாய்களின் மூலம் பயன்பெறும் நேரடி மற்றும் மறைமுக பாசனப் பரப்புகளுக்கு நேற்று 6ம் தேதி காலை 8 மணிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது.

நெல்லை கலெக்டர் கருணாகரன், சேரன்மகாதேவி சப் கலெக்டர் விஷ்ணு பாபநாசம் அணை நீரை திறந்துவிட்டனர். இதன் மூலம் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் 86,107 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை அதிகாரிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**மஞ்சளாறு அணையில் நாளை முதல் நீர் திறப்பு: முதல்வர் உத்தரவு**



தேனி மாவட்டம் மஞ்சளாறு அணையில் இருந்து நாளை முதல் நீர் திறக்க தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இதனால் தேனி, திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள 5,259 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற உள்ளன. பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பகுதிகளில் முதல்போக பாசன வசதிக்காக மஞ்சளாறு அணை திறக்கப்பட உள்ளது.

**கடலோர மாவட்டங்களில் பலத்த மழைக்கு வாய்ப்பு**

தென்மேற்கு வங்கக் கடலில் உருவாக்கி உள்ள புதிய மேலடுக்கு சுழற்சி காரணமாக, தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் பலத்த மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய இயக்குநர் ரமணன் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தென் மேற்கு வங்கக் கடலில் உருவான மேலடுக்கு சுழற்சி தொடர்ந்து அதே இடத்தில் நிலை கொண்டுள்ளது. இதனால், தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் பலத்த மழை பெய்ய உள்ளது. மேலும், உள் மாவட்டங்களில் ஆங்காங்கே மழை பெய்யவும் வாய்ப்புள்ளது.

சென்னையில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றார்.

"புயலால் பாதிப்பு இல்லை'

கடந்த சில நாள்களுக்கு முன் அரபிக்கடலில் உருவாகி இருந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் வலுவடைந்து தற்போது, புயலாக மாறி உள்ளது. இதற்கு

"மேக்' என பெயர் வைக்கப்பட்டுள்ளது. இந்தப் புயல் காரணமாக தமிழகத்துக்கு பாதிப்பு ஏற்படாது என்று வானிலை ஆய்வு மைய வட்டாரங்கள் தெரிவித்தன. மழை பதிவு (மி.மீட்டரில்): கடந்த 24 மணி நேரத்தில், தமிழகத்தில் அதிகபட்சமாகக் நாகப்பட்டினத்தில் 29.7 மி.மீ. மழையும், வால்பாறையில் 26.6 மழையும், கரூர் பரமத்தியில் 26.4 மழையும், பாளையங்கோட்டையில் 17 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

**மதுராந்தகத்தில் 12.50 மி.மீ. மழை**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மதுராந்தகத்தில் அதிக அளவு மழை அளவு பதிவானது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை காலை வரை பதிவான மழையளவு விவரம்:

காஞ்சிபுரம்- 1.30 மி.மீ., மதுராந்தகம்-12.50 மி.மீ., உத்தரமேரூர்- 5 மி.மீ. மழை பதிவானது. மாவட்டத்தின் சராசரி மழையளவு 1.88 மி.மீ.

**விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிப்புப் பயிற்சி**

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி அருகே உள்ள ஆண்டிபட்டியில் மதுரை வேளாண்மைக் கல்லூரி 4ஆம் ஆண்டு கிராம தங்கல் வேளாண்மை பணி அனுபவத்திட்ட மாணவிகள் விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிப்பு பற்றிய செயல்விளக்க பயிற்சியளித்தனர்.

இந்த முகாமுக்கு ஊராட்சித் தலைவர் ராமு தலைமை வகித்தார். இதில் மண்புழு உரம் தயாரிப்பது பற்றியும், இயற்கை உரத்தினை தோட்டங்களில் பயன்படுத்துவதன் மூலம் சத்தான காய்கறிகள் உற்பத்தி செய்ய முடியும் என்று மாணவிகள் பாக்கியலெட்சுமி, பிரதீபா, மோனிகா, ஷாத்திகா, வைத்தீஸ்வரி ஆகியோர் விளக்கி கூறினார். இதில் ஏராளமான விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**மேலூர் பகுதி விவசாயிகளுக்கு மானியத்தில் பண்ணைக் கருவிகள்**

மேலூர், கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளைச் சேர்ந்த 10 விவசாயிகளுக்கு, ரூ. 13 லட்சம் மதிப்புள்ள பண்ணைக் கருவிகள் மானிய விலையில் வியாழக்கிழமை வழங்கப்பட்டன.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம் ஆகிய திட்டங்களின் கீழ், மேலூர், கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளைச் சேர்ந்த 10 விவசாயிகளுக்கு, ரூ. 12.89 லட்சம் மதிப்புள்ள 8 பவர் டில்லர்களும், 2 ரோட்டவேட்டர்களும் வேளாண்மைத் துறையினர் சார்பில் வழங்கப்பட்டன. இவற்றுக்கு ரூ. 6.70 லட்சம் மானியம் அளிக்கப்பட்டுள்ளது.

மேலூர் வேளாண் துறை அலுவலகத்தில் வியாழக்கிழமை காலை நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், விவசாயிகளுக்கு பவர் டில்லர், ரோட்டவேட்டர்களையும் மேலூர் தொகுதி எம்.எல்.ஏ. ஆர். சாமி வழங்கினார்.

இதில், வேளாண் உதவி இயக்குநர்கள் மேலூர் ம. சரவணன், கொட்டாம்பட்டி ப.திருஞானம் மற்றும் மேலூர் நகர்மன்றத் தலைவர் செ. சரவணன், ஊராட்சி ஒன்றியத் தலைவர் செல்வராஜ் மற்றும் அலுவலர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

**குருவிகுளம் விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம்**

திருவேங்கடம், : குருவிகுளம் வட்டாரத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் கூட்டுறவு வங்கிகள் மூலம் பயறு வகை பயிர்களுக்கு மானிய விலையில் டிஏபி உரம் வழங்கப்படும் என்று குருவிகுளம் வேளாண்மை உதவி இயக்குனர் சரவணன் அறிவித்துள்ளார்.தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குருவிகுளம் வட்டாரத்தில் 3,500 ஹெக்டேர் பரப்பில் பயறு வகை பயிர்களுக்கு இலை மூலம் டி.ஏ.பி இரண்டு முறை தெளிக்க ஹெக்டேருக்கு 650 ருபாய் மானியமாக வழங்கப்படுகிறது.

விவசாயிகள் வேளாண்மை கூட்டுறவு வங்கியில் டி.ஏ.பி பெற்று பயன்படுத்திய பின்னேற்பு மானியமாக விவசாயிகளின் வங்கி கணக்கில் மானியத் தொகை வரவு வைக்கப்படும் என்ற தகவலை குருவிகுளம் வேளாண்மை உதவி இயக்குனர் சரவணன் தெரிவித்துள்ளார்.

**கோழித் தீவனத்தில் நோய் கிருமிகள் உருவாக வாய்ப்பு**

கோழித் தீவனத்தில் நோய் கிருமிகள் உருவாக வாய்ப்புள்ளதால், தீவனங்களை பாதுகாப்பான முறையில் சேமித்து வைக்க வேண்டும் என பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட செய்தி: அடுத்த 4 நாள்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். பரவலாக மழை பெய்யவும் வாய்ப்புள்ளது. அதிகமான காற்றின் ஈரப்பதத்தால் கோழித் தீவனத்தில் பூஞ்சை நச்சு ஏற்பட வாய்ப்புள்ளது. சுவற்றின் ஈரம் மூட்டைகளின் வழியாக தீவனத்தில் போகாதவண்ணம், ஈரமற்ற உலர்ந்த தரைகளிலோ அல்லது விரிப்புகளின் மேலோ சேமித்துவைக்க வேண்டும்.

கடந்த வாரம் கோழியின நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் பரிசோதனை செய்யப்பட்ட இறந்த கோழிகளில் பெரும்பாலும் குடல்புழு மற்றும் ஈகோலை நோய்களின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு இறப்பு ஏற்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

இதனால் பண்ணையாளர்கள் கோழிகளுக்கு அளிக்கப்படும் தீவனம் மற்றும் தண்ணீரை இந்த ஆய்வகத்தில் பரிசோதனை செய்து, தீவன மேலாண்மை முறைகளை கையாள வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மேட்டூர் அணை நீர்மட்டம் 3 நாள்களில் 7 அடி உயர்வு

மேட்டூர் அணையின் நீர்மட்டம் கடந்த 3 நாள்களில் 7.42 அடி உயர்ந்துள்ளது.

கர்நாடக மாநிலத்தில் காவிரியின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக தொடர்ந்து மழை பெய்து வருவதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 40 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது.

வியாழக்கிழமை காலை அணைக்கு நொடிக்கு 20,684 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இது வெள்ளிக்கிழமை காலை நொடிக்கு 40,261 கன அடியாக அதிகரித்தது. நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால், கடந்த செவ்வாய்க்கிழமை (நவ.3) காலை 63.54 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை காலை 70.96 அடியாக உயர்ந்தது. கடந்த மூன்று நாள்களில் மட்டும் அணையின் நீர்மட்டம் 7.42 அடி உயர்ந்துள்ளது.

இந்த நிலையில், வெள்ளிக்கிழமை காலை அணையின் நீர்மட்டம் 70.96 அடியாக இருந்தது. அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு நொடிக்கு

500 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 33.52 டி.எம்.சி.

### காவிரியில் 19,500 கனஅடி மழை வெள்ளம்

ஈரோடு, பெருந்துறை பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் காவிரியில் மேலணைக்கு வரும் 19,500 கனஅடி மழை வெள்ளம் அங்கிருந்து காவிரியில் முழுவதுமாக வெளியேற்றப்படுவதால், தண்ணீர் இருகரைகளையும் தொட்டுச் செல்கிறது.

வடகிழக்குப் பருவமழை மற்றும் மேலடுக்குச் சுழற்சியின் காரணமாக கடந்த சில நாள்களாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதையொட்டி, மேட்டூரிலிருந்து பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படுவது நிறுத்தப்பட்டு, குடிநீர் தேவைக்காக ஆயிரம் கனஅடி மட்டும் திறக்கப்படுகிறது.

இந்த நிலையில், வெள்ளிக்கிழமை காலை முதல் காவிரியாற்றில் தண்ணீர் வருவது அதிகரித்தது. ஈரோடு, பவானி, பெருந்துறை, நொய்யல் போன்ற பகுதிகளில் தொடர்ந்து பெய்த கனமழையால் ஏற்பட்ட மழை வெள்ளம் காவிரியாற்றில் கலந்து தண்ணீர் பெருக்கெடுத்துள்ளது.

இந்த மழைநீர் வெள்ளிக்கிழமை காலை முக்கொம்பு மேலணைக்கு வந்தது. பிற்பகலில் மழைநீர் வருவது அதிகரிக்கத் தொடங்கியது. இந்த மழை வெள்ளம் முழுவதுமாக காவிரியில் வெளியேற்றப்பட்டது.

பிற்பகலில் கம்பரசம்பேட்டை தடுப்பணையைத் தாண்டிய மழைநீர், திருச்சி மாநகரப் பகுதியில் இருகரைகளையும் தொட்டுச் சென்றது.

வெள்ளிக்கிழமை மாலை நிலவரப்படி, முக்கொம்பு மேலணைக்கு வந்த 19,500 கன அடி மழைநீர் அப்படியே வெளியேற்றப்பட்டதாக பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

### 25.8% குடும்பங்களில் மட்டுமே அயோடின் உப்பு பயன்படுத்தப்படுகிறது

தமிழகத்தில் 25.8% குடும்பங்களில் மட்டுமே அயோடின் கலந்த உப்பு பயன்படுத்தப்படுவதாக கரூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற உலக

அயோடின் குறைபாடுகள் தடுப்பு தின கருத்தரங்கில் உணவு பாதுகாப்புத் துறை அலுவலர் டாக்டர் சுரேஷ் தெரிவித்தார்.

கரூர் வெண்ணைமலை சேரன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் மாணவ நுகர்வோர் மன்றம் மற்றும் குளோபல் சமூக நல பாதுகாப்பு இயக்கம் ஆகியவற்றின் சார்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் அவர் மேலும் பேசியது:

மனிதனுக்கு அயோடின் சத்து மிகவும் அவசியம். இந்த சத்து குறைந்தால் மூளை வளர்ச்சியின்மை, கருகலைதல், ஊனமுற்ற குழந்தை பிறத்தல், முன்கழுத்து கழலை போன்ற குறைபாடுகள் ஏற்படும். இக்குறைபாட்டை போக்கும் வகையில் மத்திய, மாநில அரசுகள் உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டத்தின் மூலம் உணவில் அயோடின் கலந்த உப்பினை பயன்படுத்தக்கோரி விழிப்புணர்வு பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. இந்திய சுகாதாரத் துறை அமைச்சகம் அண்மையில் வெளியிட்ட ஆய்வின் படி, தமிழகத்தில் 25.8% பேர் மட்டுமே அயோடின் கலந்த உப்பினை பயன்படுத்துகிறார்கள் என்றும் மாவட்டத்தில் 38.1% பேர் மட்டுமே பயன்படுத்துகிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மாணவ, மாணவிகள் அனைவரும் அயோடின் கலந்த உப்பை பயன்படுத்த தங்களது பெற்றோர்களிடமும், பொதுமக்களிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றார். முன்னதாக கருத்தரங்கில் விழிப்புணர்வு கையேட்டினை டாக்டர் சுரேஷ் வெளியிட அவற்றை பள்ளி முதல்வர் பழனியப்பன் பெற்றுக் கொண்டார். நிகழ்ச்சியில் குடிமக்கள் நுகர்வோர் மன்ற ஒருங்கிணைப்பாளர் சொக்கலிங்கம் உள்ளிட்ட பள்ளி மாணவ, மாணவிகள் திரளாக பங்கேற்றனர்.

## மேற்குத் தொடர்ச்சி மலையில் பலத்த மழை களக்காடு தலையணையில் தண்ணீர் வரத்து அதிகரிப்பு: சுற்றுலாப் பயணிகள் குளிக்கத் தடை

களக்காடு மலைப் பகுதியில் வெள்ளிக்கிழமை பெய்த பலத்த மழையால் தலையணையில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் சுற்றுலாப் பயணிகள் குளிக்க வனத் துறையினர் தடை விதித்துள்ளனர்.

களக்காடு மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் கடந்த 1 வார காலமாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் தலையணையில் தண்ணீர் வரத்து அதிகரிப்பதும், குறைவதுமாக இருந்தது. கடந்த 2 தினங்களாக மலைப்பகுதியில் பலத்த மழை பெய்து வருகிறது. இதையடுத்து, மலைப்பகுதியில் உள்ள நீரோடை, அருவிகளில் தண்ணீர் வரத்து மீண்டும் அதிகரித்துள்ளது. தொடர்மழையால் களக்காடு நான்குனேரியான் கால்வாயில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. களக்காடு வட்டாரத்தில் உள்ள பாசனக் குளங்கள் வேகமாக நிரம்பி வருகின்றன.

வடக்குப் பச்சையாறு அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை நிலவரப்படி 27 அடியாக உள்ளது. கொடுமுடியாறு அணையின் நீர்மட்டம் 30 அடியாக உயர்ந்துள்ளது. தலையணையில் தடுப்பணையைத் தாண்டி தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுவதால் சுற்றுலாப் பயணிகள் குளிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வீடு இடிந்தது: களக்காடு பகுதியில் வியாழக்கிழமை இரவு பெய்த மழையில் கோயில்பத்து யாதவர் தெருவைச் சேர்ந்த விவசாயி சுடலைமுத்து என்பவர் வீடு இடிந்து விழுந்தது. அதன் அருகேயுள்ள சுப்பிரமணியன் என்பவரின் வீட்டின் பின்பக்கச் சுவரும் மழையால் சேதமடைந்தது. தகவலறிந்து வந்த வருவாய்த் துறையினர் இரு வீடுகளையும் பார்வையிட்டனர்.

**ஆத்தூரில் மரக்கன்றுகள் வழங்கல்**

சாகுபுரம் டிசிடபிள்யூ நிறுவனம் சார்பில் ஆத்தூர் பள்ளி மாணவர், மாணவிகளுக்கு 1,500 மரக்கன்றுகள் வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

ஆத்தூர் சண்முகசுந்தர நாடார் தொடக்கப் பள்ளி மற்றும் மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற இவ் விழாவுக்கு, டிசிடபிள்யூ நிறுவன செயல் உதவித் தலைவர் (நிர்வாகம்) டாக்டர் மே.சி.மேகநாதன் தலைமை வகித்தார். பேரூராட்சித் தலைவர் எம்.பி.முருகானந்தம், தெற்கு ஆத்தூர் வெற்றிலை வியாபாரிகள் சங்கத் தலைவர் சதீஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி மாணவர், மாணவிகளுக்கு 1,500 மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

விழாவில் பள்ளி நிர்வாக அலுவலர் ரஞ்சித், தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் ரோசி எமரென்ஸ், மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர் கிரிஜா, டிசிடபிள்யூ நிறுவன மக்கள் தொடர்பு துறை துணை மேலாளர் சு.சித்திரைவேல், அதிகாரி அருணா, மூத்த அதிகாரி விசு என்ற வி.சுப்பிரமணியன், பேரூராட்சி உறுப்பினர் சோமசுந்தரி கந்தசாமி, சுப்பிரமணிய பிள்ளை உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### மேல்மாத்தூரில் 32 மி.மீ. மழை

மாவட்டத்தில் வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை அதிகாலை வரையில் ஆங்காங்கே பரவலாக மழை பெய்தது. வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி வரையிலான 24 மணி நேரத்தில் பெய்த மழை விவரம் வருமாறு (மில்லி மீட்டரில்): மேல்மாத்தூர் 32, அண்ணாமலை நகர் 5.4, விருத்தாசலம் 4.4, லக்கூர், பெலாந்துறை தலா 4, குப்பநத்தம் 2, பண்ருட்டி 1.1.

### மஞ்சளாறு அணை திறப்பு எப்போது?

தேவதானப்பட்டி, : மஞ்சளாறு அணையை விரைவில் திறக்கவேண்டும் என புது ஆயக்கட்டு பாசன விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். மஞ்சளாறு அணையின் மூலம் பழைய ஆயக்கட்டு பாசனத்தில் 3386 ஏக்கரும், புதிய ஆயக்கட்டு பாசனத்தில் 1873 ஏக்கரும் ஆகும். கடந்த மாதத்தில் 25 நாட்களுக்கு மேலாக அணை நிரம்பி உபரி நீர் வெளியேற்றப்பட்டுவருகிறது. அப்படி வெளியேறும் உபரிநீர் பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு செல்கிறது. புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கு அணை திறந்தால் மட்டுமே தண்ணீர் சென்றடையும். ஆண்டுதோறும் அக்டோபர் 15ம் தேதி அணை திறப்பது வழக்கம்.

இந்நிலையில் நடப்பாண்டில் அக்டோபர் முதல் வாரத்தில் அணை முதல் முறையாக நிரம்பியவுடன் புதிய ஆயக்கட்டு பாசன விவசாயிகள் நெல் நாற்றங்காள் பணியை தொடங்கினர். ஆனால் அணையில் தண்ணீர் இருந்தும் புதிய ஆயக்கட்டு பாசன பகுதியில் நெல் நாற்றங்காள் காய்ந்து வந்தது. ஒரு வாரமாக பெய்த மழையால் உயிர் பிழைத்துள்ளது. ஆனால் நெல் நடவுப்பணி கேள்விக்குறியாக உள்ளது.அதிகாரிகள் அணையை திறக்க அரசுக்கு பரிந்துரை

செய்துள்ளதாக தெரிவிக்கின்றனர். விரைந்து அணையை திறந்தால் புதிய ஆயக்கட்டு பாசன விவசாயிகள் நெல் நடவு பணியை தொடங்க முடியும். 13ம் மடையை சரிசெய்த விவசாயிகள்: தேவதானப்பட்டியில் இருந்து 13ம் மடை என்பது தேவதானப்பட்டி, எருமலைநாயக்கன்பட்டி, டி.வாடிப்பட்டி உள்ளிட்ட பகுதிகள் ஆகும். தேவதானப்பட்டி புறவழிச்சாலை அமைக்கும் பணியின்போது 13ம் மடை வாய்க்கால் முற்றிலுமாக மூடப்பட்டுவிட்டது. இந்த வாய்க்காலை சரிசெய்து தண்ணீர் செல்லும் வகையில் ஏற்பாடுசெய்து தரக்கோரி அதிகளிடம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துவந்தனர். ஆனால் அதிகாரிகள் செவி சாய்க்கவில்லை. அணை திறப்பு தாமதம் ஒருபுறம் இருக்க வாய்க்காலை தடுத்து சாலை உள்ளது பெரும் கவலையில் விவசாயிகளை ஏற்படுத்தியது. நேற்று வெள்ளிக்கிழமை அணை திறக்கப்படும் என விவசாயிகளுக்கு தகவல் கிடைத்துள்ளது. உடடியாக வியாழக்கிழமை 13ம் மடை பாசன விவசாயிகள் ஒன்று சேர்ந்து சொந்த செலவில் ஜேசிபி வானகம் மூலம் வாய்க்காலை சரிசெய்தனர். ஆனால் அடுத்தநாள் அணை திறக்கவில்லை என்றவுடன் பெரும் கவலைக்குள்ளாகினர்.

## உரிய விலை கிடைக்காததால் செவ்வந்திப் பூக்களை விவசாயிகள் சாலையில் கொட்டினர்

ஆண்டிபட்டி பகுதியில் விளைந்துள்ள செவ்வந்தி பூ கிலோ 5 ரூபாய்க்கும் குறைவாக விலை போனதால், விவசாயிகள் பூக்களை சாலையில் கொட்டினர்.

ஆண்டிபட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பூக்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பகுதியில் விளையும் பூக்கள், ஆண்டிபட்டி பூ மார்க்கெட்டுக்கு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

தற்போது பெய்து வரும் மழை காரணமாக, ஆண்டிபட்டி பகுதியில் செவ்வந்தி பூக்கள் விளைச்சல் அதிகரித்துள்ளது. இதனால், சந்தைக்கு இந்தப் பூவின் வரத்து அதிகமாக உள்ளது. எனவே, முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு செவ்வந்தி பூ கிலோ ரூ. 5-க்கு விற்பனையானது. மேலும், செவ்வந்தி பூக்களை வாங்க வியாபாரிகள் யாரும் ஆர்வம் காட்டாததால், சந்தையில் பூக்கள் தேக்கமடைந்தன. பூக்கள் பறிப்பு கூலியை கூட ஈடுசெய்ய முடியாத அளவுக்கு விலை போனதால், விவசாயிகள் வேதனை அடைந்தனர். எனவே, விவசாயிகள் பூக்களை சாலையில் கொட்டிவிட்டுச் சென்றனர். மழையில் மல்லிகை

மொட்டுகள் அழுகிவிட்டதால், மல்லிகைப் பூவின் வரத்து இல்லை. இதனால், கிலோ ரூ. 500 வரை விற்பனையானது. இதன் விலை தீபாவளிக்கு மேலும் அதிகரிக்கும் எனவும் கூறப்படுகிறது.

வெள்ளிக்கிழமை நிலவரப்படி பூக்களின் விலை (கிலோ- ரூ): மல்லிகைப் பூ - 500, ஜாதிப் பூ - 300, கனகாம்பரம் - 500, துளசி - 15, அரளி - 50, ரோஸ் - 30, மருகு - 40, கோழிக்கொண்டை - 25, முல்லைப் பூ - 500, சம்பங்கி - 30 என விற்பனையானது.

**ஹைவேவிஸ் மலைப் பகுதியில் கனமழை: அணைகள் நிரம்பின**

சின்னமனூர் அடுத்த ஹைவேவிஸ்-மேகமலைப் பகுதியில் பெய்து வரும் தொடர் மழையால், அணைகளின் நீர்மட்டம் முழுக் கொள்ளளவை எட்டியுள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலையில் ஹைவேவிஸ் - மேகமலை அமைந்துள்ளது. இங்குள்ள மலைகள் சுமார் 3000 அடி முதல் 4000 அடி வரை உயர்ந்து காணப்படுகிறது. இப்பகுதியில் ஆண்டில் 10 மாதம் வரை மழைப்பொழிவு இருக்கும். தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவமழை காலங்களில் கூடுதல் மழை பொழிவு இருக்கும். நாள் ஒன்றுக்கு சராசரியாக 10 முதல் 15 மணி நேரம் வரை கனமழை பெய்யும்.

தற்போது வடகிழக்குப் பருவமழை தீவிரம் அடைந்துள்ள நிலையில், ஹைவேவிஸ், மணலார், இரவங்கலார் மற்றும் வெண்ணியார் ஆகிய 4 அணைகளின் நீர்மட்டம் முழுக்கொள்ளவை எட்டியுள்ளன. இந்த 4 அணைகளிலும் ஓர் அணையில் இருந்து மற்றொரு அணைக்கு சுரங்கப் பாதை வழியாக தண்ணீரைக் கொண்டு செல்லும் வசதி உள்ளது. அதன்படி, இரவங்கலார் அணையிலிருந்து குழாய் மூலம் கொண்டு செல்லப்படும் நீரைப் பயன்படுத்தி, சுருளி நீர் மின் நிலையத்தில் மின்சாரம் உற்பத்தி நடைபெறுகிறது.

**வேளாண் திட்டப்பணிகள்: இணை இயக்குநர் ஆய்வு**

சிங்கம்புணரி வட்டாரத்தில் நடைபெற்று வரும் வேளாண் திட்டப்பணிகளை வேளாண் இணை இயக்குநர் குருமூர்த்தி ஆய்வு மேற்கொண்டார்.

தேசிய உணவுப் பாதுகாப்பு திட்டத்தில் நடைபெற்று வரும் இயந்திர நடவுப் பணிகள் மற்றும் துவரைப் பயிர் பயிரிட்டுள்ள விவசாயிகளின் நிலத்தையும் அவர்

பார்வையிட்டார். மேலும் தேசிய உணவுப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் சிங்கம்புணரி பகுதி விவசாயிகளுக்கு ரூ.10 ஆயிரம் மானியத்தில் ஆயில் இஞ்சின்களை அவர் வழங்கினார். இந்த ஆய்வின் போது வேளாண்மை துணை இயக்குநர் மணிவண்ணன், உதவி இயக்குநர் கார்த்திகேயன், வேளாண் அலுவலர் அழகுராஜா, துணை அலுவலர் சிவகுமார், உதவி அலுவலர்கள் பாலமுருகன், அழகர் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**பருத்தியில் பூச்சித் தாக்குதல்: கட்டுப்படுத்த வேளாண்மைத்துறை ஆலோசனை**

பருத்தியை தாக்கும் சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த வேளாண்மை அறிவியல் நிலையம் ஆலோசனை வழங்கியுள்ளது.

பருத்தியில் நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து கோவிலாங்குளம் வேளாண் அறிவியல் நிலைய பயிர் பாதுகாப்புத்துறை தொழில்நுட்ப வல்லுனர் ராஜேந்திரன் அறிக்கை:

காரியாபட்டி மற்றும் திருச்சுழி வட்டாரங்களில் தற்சமயம் விவசாயிகள் பருத்தி சாகுபடி செய்துள்ளனர்.

இப்பருவத்தில் தத்துப்பூச்சி, இலைப்பேன், அசுவினி மற்றும் வெள்ளை ஈயின் தாக்குதல் வருவதற்கு வாய்ப்புகள் உள்ளன. இந்த பூச்சிகளின் தாக்குதலினால் செடிகள் மஞ்சள் நிறமடைந்து பயிர் வளர்ச்சி குன்றி காணப்படும். தாக்குதல் அதிகமிருந்தால் செடிகள் வாடி கருகிவிடும்.

நோயைக் கட்டுப்படுத்த பருத்தி விதைகளை ஊடுருவி பாயும் பூச்சிகொல்லியான இமிடாகுளோபிரிட் மருந்தை ஒரு கிலோ விதைக்கு 5 மில்லி என்ற அளவில் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கவேண்டும். பயிர் முளைத்த 20 முதல் 25 நாளில் இமிடாகுளோபிரிட் மருந்து ஏக்கருக்கு 40 மில்லி என்ற அளவிலும் அல்லது ரோகார் மருந்து ஏக்கருக்கு 300 மில்லி என்ற அளவிலும் பயிரில் தெளிக்க வேண்டும்.

தேவைப்பட்டால் 15 நாள்கள் கழித்து மீண்டும் ஒருமுறை தெளிக்க வேண்டும். குருணை மருந்துகளான பியூரடான் அல்லது போரேட் மருந்துகளை ஏக்கருக்கு 5 கிலோ என்ற அளவில் 3 பங்கு மணலுடன் கலந்து மண்ணில் இடவேண்டும்.

தாவரபூச்சி கொல்லிகளான வேப்பஎண்ணெய் 3 சதம் அல்லது வேப்பங்கொட்டை சாறு 5 சதம் என்ற அளவில் ஒட்டும் திரவத்துடன் கலந்து பயிரில் தெளிக்க வேண்டும். ஊடு பயிராக தட்டைபயறு, சூரியகாந்தி மற்றும் மக்காசோளம் பயிரிட்டால் நன்மைசெய்யும் பூச்சியான பொறி வண்டின் எண்ணிக்கை பெருகி அசுவினி, தத்துபூச்சி மற்றும் இலைப்பேனின் தாக்குதல் குறைகிறது.

மஞ்சள் வண்ண ஒட்டும் பொறி ஏக்கருக்கு 10 என்ற அளவில் வைத்து வெள்ளை ஈயின் தாக்குதலை குறைக்க வேண்டும். விளக்கு பொறி ஏக்கருக்கு 5 என்ற எண்ணிக்கையில் வைத்து சாறு உறிஞ்சும் பூச்சிகளை கவர்ந்து இழுத்து அழிக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

**நிரம்பியது சீரணம்பாளையம் ஏரி**

பலத்த மழையால் பெருந்துறையை அடுத்த சீரணம்பாளையம் ஏரி நிரம்பியது.

பெருந்துறை, சென்னிமலையில் கடந்த ஒரு வாரமாக பலத்த மழை பெய்து வருகிறது.

சீரணம்பாளையத்தில் 36 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள ஏரி 19 ஆண்டுகளுக்குப் பிறகு நிரம்பியுள்ளது.

பெருந்துறை - ஈரோடு சாலையில் மழை நீர் தேங்கியதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதையடுத்து, நெடுஞ்சாலைத் துறையினர் பொக்லைன் இயந்திரம் மூலமாக வெள்ளம் வடிய ஏற்பாடு செய்து, போக்குவரத்தை சீரமைத்தனர்.

சென்னிமலை பகுதியில் வியாழக்கிழமை இரவு பெய்த மழையால் பல இடங்களில் வெள்ளம் புகுந்தது. பனியம்பள்ளி, வேடிச்சிகாட்டைச் சேர்ந்த சண்முகசுந்தரம் என்பவருக்குச் சொந்தமான 3 கோழிப் பண்ணையில் மழை வெள்ளம் புகுந்தது.

இதில், 2 பண்ணைகளில் இருந்த 4,250 கோழிகள் இறந்து விட்டன. ஒரு பண்ணையில் இருந்த 1,300 கோழிகள் உயிருடன் மீட்கப்பட்டன.

மேலும், சென்னிமலை - ஊத்துக்குளி சாலை, செல்லகவுண்டம்பாளையத்தை அடுத்த சின்னகனுவாய் பகுதியில் காப்புக்காடுகளில் வனத்துறையினர் மழைநீர் குட்டை கட்டியுள்ளனர். இந்தக் குட்டைகள் நிரம்பி தண்ணீர்

அதிகப்படியாக தேங்கியதில் சாலையில் உள்ள தரைமட்டப் பாலம் மூழ்கியது. இதனால், அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இதையடுத்து, வனத்துறை அதிகாரிகள், கிராம நிர்வாக அதிகாரிகள் வனக் குட்டையின் ஒரு கரையை பொக்லைன் இயந்திரம் மூலமாக இடித்து வெள்ளம் வடிய ஏற்பாடு செய்தனர். அதன் பின்பு போக்குவரத்து சரி செய்யப்பட்டது.

**பருவ மழையால் பாதிக்கப்பட்ட 32 பேருக்கு நிவாரண நிதி: அமைச்சர் எஸ்.பி.வேலுமணி வழங்கினார்**

கோவை மாவட்டத்தில் பருவ மழையால் பாதிக்கப்பட்ட 32 பேருக்கு மொத்தம் ரூ. 5.27 லட்சம் நிவாரண நிதியை நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி வெள்ளிக்கிழமை வழங்கினார்.

தமிழகத்தில் பருவ மழை தீவிரமடைந்துள்ளதையொட்டி, மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முதல்வர் ஜெயலலிதா துரிதப்படுத்தியுள்ளார். மேலும், பருவ மழையின்போது ஏற்படும் உயிரிழப்புகள் மற்றும் சேதங்களுக்கான நிவாரண உதவித் தொகைகளை உயர்த்தி வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், கடந்த நவ.3-ஆம் தேதி கோவை ஆவாரம்பாளையம், சிந்தாமணி நகரைச் சேர்ந்த முருகன் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தார். அவரது குடும்பத்துக்கு ரூ. 4 லட்சத்துக்கான காசோலையை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி வழங்கினார்.

மேலும், மழையால் பகுதி சேதமடைந்த குடிசை வீடுகளுக்கு ரூ. 4,100- வீதம் 31 பேருக்கு மொத்தம் ரூ. 1.27 லட்சத்துக்கான காசோலையை அமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக், மேயர் ப.ராஜ்குமார், மக்களவை உறுப்பினர் ஏ.பி.நாகராஜ், எம்.ஆறுமுகம் எம்.எல்.ஏ., மாவட்ட வருவாய் அலுவலர் கிறிஸ்துராஜ், மத்திய மண்டலக் குழுத் தலைவர் கே.ஏ.ஆதிநாராயணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினகரன்

**பெரியாறு அணையில் துணைக்குழு ஆய்வு**




கூடலூர் : வடகிழக்கு பருவமழை காரணமாக பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. மத்திய நீர்வள ஆணைய செயற்பொறியாளர் அம்பர்ஜி ஹாரிஷ் கிரிஷ் தலைமையில், தமிழகப் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் மாதவன், உதவிசெயற்பொறியாளர் சவுந்தரம், கேரள நீர்பாசனத்தறை அதிகாரி ஜார்ஜ் டேனியல் அடங்கிய துணைக்குழுவினர், நேற்று பெரியாறு அணையை ஆய்வு செய்தனர்.

**வடகிழக்கு பருவ மழை தீவிரம் தொடர் மழைக்கு 4 பேர் பரிதாப சாவு**




சென்னை : தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை பெய்ய துவங்கியதையடுத்து பரவலாக மழை பெய்து வருகிறது. நெல்லை மாவட்டத்தில் பெய்த மழையின் காரணமாக தென்காசியை அடுத்த வடகரையில் வீட்டு கூரை இடிந்து விழுந்ததில் இடிபாடுகளுக்குள் சிக்கி இஸ்மாயில் பீவி (70) என்ற பெண் பலியானார். மின்னல் தாக்கி 3 பேர் பலி: தூத்துக்குடி மாவட்டம் செய்துங்கநல்லூர் அருகே உள்ள சின்னார்குளத்தை சேர்ந்த செல்வக்குமார்(28), நேற்று மதியம் அதே ஊரைசேர்ந்த பசுபதி (21) என்பவருடன் மொபட்டில் மூலைக்கரைப்பட்டிக்கு பள்ளி குழந்தைகளை அழைத்து வர சென்றார்.நாகல்குளம் அருகே வந்தபோது இடி மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இதையடுத்து இருவரும் மொபட்டை ஓரமாக நிறுத்திவிட்டு, அருகில் உள்ள கட்டிடத்துக்குள் சென்றனர். அப்பகுதியில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த நல்லமுத்து (55), மழைக்காக ஒதுங்கி நின்றார். அப்போது திடீரென்று மின்னல் தாக்கியதில் 3 பேரும் உடல் கருகி பலியாயினர்.

**மேலடுக்கு சுழற்சி நீடிப்பு தமிழக கடலோர பகுதியில் கனமழை**



சென்னை : வங்கக் கடலின் மேலடுக்கில் ஏற்பட்ட காற்று சுழற்சி அதே இடத்தில் நீடிப்பதை அடுத்து தமிழகம், புதுச்சேரி கடலோரப் பகுதியில் கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடந்த வாரம் தென் மேற்கு வங்கக் கடலில் ஏற்பட்ட வளி மண்டல மேல் அடுக்கு சுழற்சியால் தமிழகத்தில் தொடர்ந்து மழை பெய்து வந்தது. அந்த காற்று சுழற்சி மேற்கு திசையில் நகர்ந்து சென்றதை அடுத்து தற்போது புதியதாக ஒரு காற்று சுழற்சி உருவாகியுள்ளது. இதனால் தமிழகத்தில் இரண்டு நாட்களாக மழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக நேற்று, பாபநாசம், பெருந்துறையில் 50 மிமீ மழை பெய்துள்ளது. இந்நிலையில், தென் மேற்கு வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள காற்று சுழற்சி அதே இடத்தில் நீடிப்பதால் தமிழகம், புதுச்சேரியில் கடலோரப் பகுதியில் கனமழை பெய்யும். உள் மாவட்டங்களில் அனேக இடங்களில் மழை பெய்யும்.

**சம்பா நெற் பயிருக்கான தேசிய பயிர் காப்பீடு திட்டம்**

திருச்சி, : பயிர்களுக்கு இயற்கை சீற்றங்களினாலும் பூச்சி நோய்களினாலும் ஏற்படும் மகசூல் இழப்பை ஈடுகட்டும் வகையில் விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சந்திரசேகரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது; புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்க்கை இடர்பாடுகளாலும் பூச்சி நோய் தாக்குதலினாலும் பயிர்களின் மகசூல் பாதிக்கிறது. இத்தகைய பாதிப்பிலிருந்து விவசாயிகளை காக்க தேசிய வேளாண் பயிர் காப்பீடு திட்டம் திருச்சி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் சேவை வங்கிகள் மூலம் பயிர் கடன் பெற்றுள்ள விவசாயிகள் அனைவரும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர் . கடன் பெறாத விவசாயிகளும் இத்திட்டத்தில் பயிர் காப்பீடு செய்து பயன் பெறலாம். சம்பா நெற் பயிருக்கு இத்திட்டம் மாவட்டத்தின் அனைத்து வட்டாரங்களிலும் செயல்படுத்தப்படவுள்ளது. பயிர் பாதிப்பு ஏற்படும்போது உத்தரவாத மகசூலிலிருந்து நடப்பு பயிரின் மகசூல் எவ்வளவு குறைந்திருக்கிறதோ அதே விகிதப்படி நஷ்டஈடு வழங்கப்படும். உத்திரவாத மகசூலை கணக்கிட நெற்பயிருக்கு மூன்று வருட சராசரி மகசூலும் இதர பயிர்களுக்கு ஐந்து வருட சராசரி மகசூலும் எடுத்துக் கொள்ளப்படும். வட்டார அளவில் காப்பீடு செய்யப்பட்ட பயிரின் மகசூல் உத்திரவாத

மகசூலின் அளவை காட்டிலும் குறைவாக இருந்தால் அந்தப் பயிரை காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளுக்கும் மகசூல் குறைவு விகிதப்படி இழப்பீடு அளிக்கப்படும்.

பயிர் காப்பீடு செய்வதற்கான பிரிமீயத் தொகையில் கடன் பெறாத சிறு, குறு விவசாயிகளுக்கு 55 சதவீதமும் இதர விவசாயிகளுக்கு 50 சத மானியத்தை அரசே செலுத்தி விடுவதால் மீதமுள்ள தொகையை செலுத்தி பயிர் காப்பீடு செய்யலாம். சம்பா நெற் பயிரை பொறுத்தவரையில் ஒரு ஏக்கர் பயிர் காப்பீடு செய்ய கடன் பெறாத சிறு,குறு விவசாயிகள் ரூ134-ம் இதர விவசாயிகள் ரூ149-ம் செலுத்தினால் போதுமானது. பயிர் காப்பீடு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்களை தங்கள் பகுதி வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களிலோ, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலோ பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை பயிர் நடவு செய்த ஒரு மாதத்திற்குள் அல்லது டிசம்பர் 15ம் தேதிக்குள் இதில் எது முன்னதாக உள்ளதோ அந்நாளுக்குள் உரிய பிரிமியத் தொகையுடன் சம்மந்தப்பட்ட கூட்டுறவு கடன் சங்கங்கள் அல்லது அரசுடமையாக்கப்பட்ட வங்கிகளில் செலுத்தி இத்திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலலாம். இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**உலக மசாலா: பசித்தவர்களுக்கு உணவு!**

சான்பிரான்சிஸ்கோவில் சாலைகளிலும் வீட்டு வாசல்களிலும் பழங்கள் தரக்கூடிய மரங்கள் வளர்ப்பதற்கு சட்டப்படி அனுமதி இல்லை. சாலைகளில் பழங்கள் விழுந்து, நசுங்கி அந்த இடத்தில் நடந்து செல்பவர்களுக்குப் பெரும் இடையூறாக இருக்கும் என்பதால் அனுமதிப்பதில்லை. பழங்கள் கொடுக்காத பூத்துக்கு குலுங்கும் மரம், செடிகளே எங்கும் வைத்திருக்கிறார்கள். ஏழைகளுக்கு உதவும் ஓர் அமைப்பினர் ஏற்கெனவே இருக்கும் மரங்கள், செடிகளில் பழங்கள் தரக்கூடிய மரங்களின் குச்சிகளை இணைத்து விடுகிறார்கள்.

அலங்கார மரங்களுக்கு அடியே நிஜ மரங்களை நட்டுவிடுகிறார்கள். தொடர்ந்து தண்ணீர் விட்டுப் பராமரிக்கும் பணியையும் செய்கிறார்கள். செடிகளும் மரங்களும் வளர்ந்து, பூத்து, காய்த்து, பழங்களைத் தருகின்றன. அந்த வழியே செல்லும் ஏழைகள் பழங்களைப் பறித்து, பசியாறிக்கொள்கிறார்கள்.

“அனுமதி இன்றி இப்படி அடுத்தவர்களின் இடங்களில் செடிகளை நடுவதும் பராமரிப்பதும் குற்றம். ஆனால் யார் செய்கிறார்கள் என்பதை பொதுமக்கள் காட்டிக் கொடுக்க மாட்டார்கள். வீட்டின் உரிமையாளர்கள் இந்தப் பழங்கள் கீழே விழுந்து நடக்கும்போது வழுக்கி விழ வேண்டியிருக்கிறது என்று புகார் அளிக்கிறார்கள்” என்கிறார் நகர நிர்வாகி க்ளோரியா சான்.

‘‘கடந்த 5 ஆண்டுகளாக இப்படிப் பழங்களை விளைவித்து வருகிறோம். அதிக மணமோ, குப்பையோ இல்லாத பேரிக்காய், ப்ளம், செர்ரி பழங்களை மட்டுமே விளைவிக்கிறோம். ஒரு வேளை பசிக்கு சில பழங்கள் சாப்பிட்டால் கூட போதுமானது. பசித்தவர்களுக்கு உணவு அளிப்பதை விட நடைபாதை தூய்மை முக்கியமானதா? இதற்காக வீட்டின் உரிமையாளர்கள் சின்ன இடத்தைத் தரவேண்டியது இருக்கிறதே தவிர, பராமரிப்பு எல்லாம் எங்களுடையதே’’ என்கிறார் டாரா ஹுய்.

**பசித்தவர்களுக்கு உணவிடுவது எத்தனை உன்னதமானது!**

கனடாவில் உள்ள ஒரு மீனவர் காந்தத் தூண்டிலை வலையுடன் இணைத்து கடலில் வீசினார். சிறிது நேரத்துக்குப் பிறகு பழைய மீன் தூண்டில்கள், கொக்கிகள் ஏராளமாகக் கிடைத்தன. மீண்டும் தூண்டிலை வீசியபோது கத்திகள், கத்தரிக்கோல்கள், பூட்டு போன்றவை கிடைத்தன. இன்னொரு முறை ஒரு கல் கிடைத்தது. அந்தக் கல்லில் மொழிபெயர்க்கப்பட்ட குரானும், திசைகளும் எழுதப்பட்டிருந்தன. அடுத்து துப்பாக்கித் தோட்டாவும் துருப்பிடித்த துப்பாக்கியும் கிடைத்தன.

**கடலையும் குப்பைக் கிடங்காக மாற்றியாச்சு…**

இங்கிலாந்தில் வசிக்கிறார் ஜூலியா காஸ். பிறவியில் இருந்தே அவரது முகத்தின் ஒரு பகுதி கட்டிகளால் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. முகம் கோரமாக இருந்ததால் அக்கம்பக்கத்தில் இருக்கும் குழந்தைகள் ஜூலியாவுடன் பேசவோ, விளையாடவோ மாட்டார்கள். ஜூலியாவின் பெற்றோர்கள் குறை தெரியாமல் பார்த்துக்கொண்டனர். பள்ளியில் படித்த காலம் முழுவதும் சக மாணவர்களால் மோசமான கிண்டலுக்கு உள்ளானார் ஜூலியா. மனம் உடைந்து போனபோது, ஜூலியாவுக்கு அறுவை சிகிச்சை செய்து, ஓரளவு முகத்தைச் சரி செய்தார்கள். ஆனாலும் ஒருபக்கம் முழுவதும் தழும்புகள் இருக்கும். முடியை வைத்து மறைத்துக்கொள்வார். ‘‘என் பெற்றோரைத் தவிர என்னிடம் யாரும் நெருங்கிப் பழக மாட்டார்கள். ஒருகட்டத்தில் நானே மற்றவர்களிடமிருந்து ஒதுங்கிவிட்டேன். ஆன்லைனில் என் குறை தெரியாததால் நிறைய நண்பர்கள் கிடைத்தனர். என்னுடைய தனிமையை

அவர்கள் போக்கினர். 18 வயதில் ஒருவன் என்னைக் காதலிப்பதாகச் சொன்னான்.

நான் குறையை அவனிடம் சொன்ன பிறகு, காணாமல் போய்விட்டான். அன்பே கிடைக்காத உலகில் காதலை எல்லாம் நினைத்துக்கூடப் பார்க்கக்கூடாது என்று சமாதானம் செய்துகொண்டேன். இதோ 34 வயதில் கிரஹாம் என்ற அற்புதமான மனிதர் என் வாழ்க்கைத் துணையாகக் கிடைத்துவிட்டார். அவரை நேரில் சந்திக்கும் வரை எனக்குக் கொஞ்சம் பதற்றமாகவே இருந்தது. ஆனால் என் குறை பற்றி ஒரு வார்த்தை கூட அவர் பேசவும் இல்லை, கண்டுகொள்ளவும் இல்லை. குடும்பம் நடத்த உருவம் முக்கியமில்லை, உள்ளம்தான் முக்கியம் என்றார். இந்த ஒரு நல்ல மனிதருக்காகத்தான் இத்தனை நாட்கள் நான் காத்திருந்தேன். இதுவரை பட்ட கஷ்டங்கள், அவமானங்கள் அனைத்தும் காற்றில் கரைந்துவிட்டன. இனி என் வாழ்க்கையில் மகிழ்ச்சி மட்டுமே நிறைந்திருக்கும். முதல் முறை தயக்கமின்றி என் புகைப்படங்களை வெளியிட்டிருக்கிறேன்'' என்கிறார் ஜூலியா.

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

**முதல் போக சாகுபடி பாசனத்துக்காக மஞ்சளாறு அணை நாளை திறப்பு: ஜெயலலிதா உத்தரவு**



சென்னை, நவ. 7–

முதல்–அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

தேனி மாவட்டம், மஞ்சளாறு அணையிலிருந்து தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பகுதிகளுக்கு முதல்போக சாகுபடிக்காக தண்ணீர் திறந்துவிடக்கோரி, வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.

வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பகுதிகளுக்கு முதல் போக சாகுபடி பாசனத்திற்காக மஞ்சளாறு அணையிலிருந்து 8.11.2015 முதல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள 5,259 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## அந்தியூர் வாரச்சந்தையில் ரூ.7 லட்சத்துக்கு வெற்றிலை விற்பனை



அந்தியூர்,

அந்தியூர் வாரச்சந்தையில் வாரந்தோறும் வெற்றிலை வியாபாரம் நடைபெற்று வருகிறது. அதன்படி நேற்று வெற்றிலை வியாபாரம் நடைபெற்றது. இதற்கு ஆப்பக்கூடல், வேம்பத்தி, வெள்ளாளபாளையம், ஒரிச்சேரிபுதூர், அத்தாணிகாலனி, எண்ணமங்கலம், கோவிலூர், காந்திநகர் ஆகிய பகுதிகளில் இருந்து விவசாயிகள் வெற்றிலைகளை கொண்டு வந்திருந்தனர். பீடா வெற்றிலை (ஒரு கட்டு) 15 ரூபாய் முதல் 20 ரூபாய் வரை விற்பனை ஆனது. ராசி ரக வெற்றிலை (ஒரு கட்டு) 40 ரூபாய் முதல் 60 ரூபாய் வரை விற்பனை ஆனது. மொத்தம் ரூ.7 லட்சத்துக்கு வெற்றிலை விற்பனை செய்யப்பட்டது.

ஈரோடு, பெருந்துறை, காஞ்சிக்கோவில், சத்தியமங்கலம், மேட்டுப்பாளையம், கர்நாடகா மாநிலம் மைசூர் ஆகிய பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வெற்றிலையை வாங்கி சென்றனர்.

## கோவை வர்த்தக மையத்தில் ரூ.2 கோடியே 51 லட்சத்துக்கு தேயிலைத்தூள் ஏலம்



கோவை,

கோவை வர்த்தக மையத்தில் ரூ.2 கோடியே 51 லட்சத்துக்கு தேயிலைத்தூள் ஏலம் போனது.

<u>கோவை வர்த்தக மையம்</u>

கோவையில் உள்ள தேயிலை வர்த்தக மையத்தில் வாரந்தோறும் இணையதளம் மூலம் தேயிலைத்தூள் ஏலம் நடைபெற்று வருகிறது. இதில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள ஏலதாரர்கள் தேயிலைத்தூள் ரகங்களை ஏலத்தில் எடுத்து வருகிறார்கள். இதன்படி நடைபெற்ற 45–வது ஏலத்தின் விவரம் வருமாறு:–

இதில் 2 லட்சத்து 45 ஆயிரத்து 274 கிலோ தேயிலைத்தூள் ஏலத்துக்கு வந்தது. அதில் 1 லட்சத்து 98 ஆயிரத்து 401 கிலோ தேயிலைத்தூள் ஏலம் போனது. இது 81 சதவீதம் ஆகும். இதன் ஏல மதிப்பு ரூ.1 கோடியே 68 லட்சத்து 40 ஆயிரத்து 276 ஆகும். இதில் 46 ஆயிரத்து 871 கிலோ தேயிலைத்தூள் தேக்கம் அடைந்து உள்ளது. ஒரு கிலோ தேயிலைத்தூளின் சராசரி ஏல மதிப்பு 84 ரூபாய் 88 காசு. இது கடந்த வாரம் 87 ரூபாய் 39 காசாக இருந்தது. இதன்மூலம் கிலோவுக்கு 2 ரூபாய் 51 காசு விலை வீழ்ச்சி அடைந்து உள்ளது.

<u>24,355 கிலோ தேக்கம்</u>

இலைரக தேயிலையை பொறுத்தவரை 1 லட்சத்து 43 ஆயிரத்து 371 கிலோ ஏலத்திற்கு வந்தது. இதில் 1 லட்சத்து 19 ஆயிரத்து 16 கிலோ ஏலம் போனது. இது 83 சதவீதம் ஆகும். இதன் மொத்த விற்பனை மதிப்பு ரூ.83 லட்சத்து 39 ஆயிரத்து 451 ஆகும். இதில் 24 ஆயிரத்து 355 கிலோ இலைரக தேயிலைத்தூள் தேக்கம் அடைந்து உள்ளது. ஒரு கிலோ இலைரக தேயிலையின் சராசரி ஏல மதிப்பு 70 ரூபாய் 7 காசு ஆகும். இது கடந்த வாரம் 69 ரூபாய் 9 காசாக இருந்தது.

இந்த ஏலத்தில் 3 லட்சத்து 17 ஆயிரத்து 417 கிலோ தேயிலைத்தூள் மற்றும் இலைரக தேயிலை விற்பனையாகி உள்ளது. 71 ஆயிரத்து 226 கிலோ தேக்கம் அடைந்துள்ளது. இந்த ஏலத்தின் மொத்த மதிப்பு ரூ.2 கோடியே 51 லட்சத்து 79 ஆயிரத்து 727 ஆகும். இந்த தகவலை கோவை தேயிலை விற்பனை மைய (போர்ப்ஸ்) மேலாளர் எம்.பிரபாகரன் தெரிவித்து உள்ளார்.

## எருக்கூர் அரிசி ஆலை கட்டுமான பணிகள் அமைச்சர்கள் ஆய்வு



எருக்கூர் பொது வினியோகத்திட்ட கிடங்கை அமைச்சர்கள் காமராஜ், ஜெயபால் ஆகியோர் ஆய்வு செய்த போது எடுத்தபடம்.

எருக்கூர் அரிசி ஆலை கட்டுமான பணிகளை அமைச்சர்கள் காமராஜ், ஜெயபால் ஆகியோர் ஆய்வு செய்தனர்.

அமைச்சர்கள் ஆய்வு

முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவின்படி அமைச்சர்கள் காமராஜ், ஜெயபால் ஆகியோர் எருக்கூர் அரிசி ஆலை நவீனமயமாக்கும்கட்டுமான பணிகள், பொது வினியோகத்திட்ட கிடங்கு ஆகியவற்றில் ஆய்வு செய்தனர்.

அப்போது உணவு பொருள் வழங்கல் துறை ஆணையாளர் கோபாலகிருஷ்ணன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகநிர்வாக இயக்குனர் பாலச்சந்திரன், உணவு பொருள் குற்றப்புலனாய்வு துறை கூடுதல் இயக்குனர் ராதாகிருஷ்ணன், கலெக்டர் பழனிசாமிஆகியோர் உடன் இருந்தனர். இதைத்தொடர்ந்து மாலை 4 மணிக்கு கலெக்டர் அலுவலகத்தில், பொது வினியோகத்திட்ட செயல்பாடுகள் குறித்த கலந்தாய்வு கூட்டம் அமைச்சர் காமராஜ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு அமைச்சர் ஜெயபால் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் அமைச்சர் காமராஜ் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும் தான் 1 கோடியே 90 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்குவிலையில்லா அரிசி வழங்கும்ஒப்பற்ற திட்டம் செயல்படுத்தப்பட்டுவருகிறது. நாகப்பட்டினம் மாவட்டத்தில், இன்றுவரை 33 புதிய பகுதி நேர நியாய விலை அங்காடிகள் பொது மக்களின் தேவைக்கேற்ப திறக்கப்பட்டுள்ளன.

புதிய குடும்ப அட்டைநாகப்பட்டினம் மாவட்டத்தில் புதிய குடும்ப அட்டை கோரி இதுவரை பெறப்பட்ட 43 ஆயிரத்து 908 மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு 37 ஆயிரத்து 266 குடும்ப அட்டைகள் மனுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அறுவடை காலங்களில் விவசாயிகளுக்கு தேவைப்படும் இடங்களில் எல்லாம் கொள்முதல் நிலையங்கள் திறக்க கலெக்டர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. புதுடெல்லியில் நடைபெற்ற உணவு துறை அமைச்சர்களின் மாநாட்டில் ஜெயலலிதா உத்தரவின்படி எடுக்கப்பட்டு வரும் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளை மத்திய அரசு வெகுவாக பாராட்டியது. இவ்வாறு அவர் பேசினார்.இதில் நாகை மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அபினவ்குமார், பாரதிமோகன் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் பவுன்ராஜ், சக்தி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணகிரி அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு



கிருஷ்ணகிரி அணையில் இருந்து வலது மற்றும் இடதுபுற கால்வாய்கள் வழியாக தண்ணீர் வெளியேறுவதை படத்தில் காணலாம்

கிருஷ்ணகிரி அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

நீர்வரத்து அதிகரிப்பு

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்தது இதே போல கர்நாடக மாநிலம் பெங்களூரு மற்றும் தென்பெண்ணை ஆற்றில் நீர்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து வருகிறது. இதனால் கிருஷ்ணகிரி அணைக்கு வரக்கூடிய நீரின் அளவு அதிகரித்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் அணைக்கு நீர்வரத்து குறைந்தது.அப்போது வினாடிக்கு 1,083 கன அடி வீதம் தண்ணீர் வந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 351 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டது. இந்த நிலையில் நேற்று மீண்டும் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. நேற்று காலை நிலவரப்படி அணைக்கு 1,544 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து வலது மற்றும் இடதுபுற கால்வாய்கள் வழியாக 526 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டது.

நீர்மட்டம் 50.80 அடி

கிருஷ்ணகிரி அணையின் உச்சபட்ச நீர்மட்டம் 52 அடியாகும். நேற்று காலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 50.80 அடியாக இருந்தது. அணைக்கு தொடர்ந்து தண்ணீர் வரத்து அதிகரித்தால் மெயின் மதகுகள் வழியாக தண்ணீர் திறந்து விடப்படும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பரவலாக மழை அதிகபட்சமாக நன்னிலத்தில் 14 மி.மீ. பதிவானது



திருவாரூர் மாவட்டத்தில் நேற்று பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக நன்னிலத்தில் 14 மி.மீட்டர் மழை பதிவானது.

வடகிழக்கு பருவ மழை

தமிழகத்தில் கடந்த 28-ந்தேதி முதல் வடகிழக்கு பருவ மழை பெய்து வருகிறது. பருவமழை தொடங்கிய நாள் முதல் தொடர்ந்து 5 நாட்களுக்கு மாவட்டம் முழுவதும் பலத்த மழை பெய்தது. அதன் பிறகு குறைந்த அளவே மழை பெய்து வந்தது. இந்தநிலையில் தென்மேற்கு வங்க கடலில் புதிய மேலடுக்கு சுழற்சி உருவாகி இருப்பதாகவும், இதன் காரணமாக அதிக மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாகவும் சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்தது. அதன்படி நேற்று திருவாரூர் மாவட்டத்தில் பலத்த மழை பெய்தது.

திருவாரூரில் நேற்று காலை 10.30 மணிக்கு மழை பெய்ய தொடங்கியது. இந்த மழை மதியம் வரை நீடித்தது. இந்த மழை காரணமாக தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பொருட்கள் வாங்குவதற்காக கடை வீதிக்கு வந்த பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டனர். இதேபோல் மன்னார்குடி, நன்னிலம் உள்ளிட்ட இடங்களிலும் நேற்று பரவலாக மழை பெய்தது.

மழை அளவு

நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் நன்னிலத்தில் அதிகபட்சமாக 14 மில்லி மீட்டர் மழை பெய்தது. மாவட்டத்தின் மற்ற இடங்களில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீட்டர் அளவுகளில்) வருமாறு:-

குடவாசல்-7, திருவாரூர்-5, வலங்கைமான்-2, திருத்துறைப்பூண்டி-1. நேற்று மாவட்டம் முழுவதும் சராசரியாக 3 மில்லி மீட்டர் மழை பதிவானது குறிப்பிடத்தக்கது.